VINOPA PAVE

R.T.P.SUBRAMANIA NADAR

2:51y7M94
31J5

# விநோபா பாவே

எழுதியது

ரெ. தே. பெ. சுப்பிரமணிய நாடார்

பிரசுரித்தது

**தமிழ் நாடு பூமிதானக் கமிட்டி**

ஊழியரகம், காந்தி கிராமம் (மதுரை)

முதல் பதிப்பு: 1953 மார்ச்.
இரண்டாம் பதிப்பு: 1953 நவம்பர்.
மூன்றாம் பதிப்பு: 1955 ஜூலை.

மதுரை ஸ்ரீ ராமகிருஷ்ணா பிரஸில் அச்சிடப்பெற்றது

# முன்னுரை

வினோபாஜி தனிப்பட்டோர் சத்தியாக்கிரஹத்தின்போது தான் மகாத்மா காந்தியால் முதல் சத்தியாக்கிரஹியாக வெளி உலகிற்கு அறிமுகப்படுத்தப்பட்டார். 1916-ம் வருடத்திலேயே அவர் காந்திஜியின் சபர்மதி ஆசிரமத்தில் சேர்ந்துவிட்டாராயினும் அவரைப்பற்றி நெருங்கிய ஆசிரம நண்பர்களைத்தவிர வெளியே யாருக்கும் தெரியாது. அவர் ஆடம்பரமின்றி அடக்கமாக வாழ்க்கை நடத்தியதற்கு அதுவே சிறந்த சான்றாகும்.

அரசியல் சுதந்தரத்தைப்போன்றே பொருளாதார சமத்துவம் முக்கியமானது, மகத்தானது. வினோபாஜி இதற்குத் தலைமை தாங்கி வழிகாட்டி நடத்த முன் வந்திருப்பது தேசத்தின் பெரும்பாக்கியமாகும்.

பல நண்பர்கள் ஆங்காங்கு அவருடைய வாழ்க்கை வரலாறு பற்றி விசாரிக்கின்றார்கள். கிராமங்களில் சாதாரண மக்களும் பள்ளி மாணவர்களும், குழந்தைகளும் அவற்றை ஆவலோடு கேட்கிறார்கள். ஆனால் அவர் 'சுயசரிதம் என்று எழுதப்படுதல் கூடாது' என்ற கொள்கை உடையவர். எனினும் மக்களின் விருப்பத்தைப் பூர்த்தி செய்யவேண்டியது அவசியம். எனவே வினோபாஜியுடன் நெருங்கிப்பழகியவர்கள். எழுதியிருக்கும் குறிப்புகளைக்கொண்டு இப் புத்தகம் தயாரித்திருக்கிறோம்.

ஸ்ரீ ரெ. தெ. சுப்பிரமணிய நாடார் அவர்களால் இப்புத்தகம் எழுதப்பட்டது. இவருடைய சேவை, அடக்கம் இவைகளைப்பற்றித் தமிழ்நாடு நன்கறியும். பல ஆண்டுகளாக காந்தீய நெறியில் மிகவும் பற்றுக்கொண்டு தொண்டுபுரிந்து வருகிறவர்.

தேசத்தின் பொருளாதார, கலாசார, ஆத்மீக உள்ளத்திற்கு இணங்க, இயக்கமாகத் தோன்றியிருக்கும் பூமிதான யக்ஞம் தமிழ் நாட்டில் நடந்துகொண்டிருக்கும் இந்த சமயத்தில் அதன் ஆரம்பகர்த்தாவான வினோபாஜியின் இந்த வாழ்க்கை வரலாற்றை மக்கள் ஆவலோடு வரவேற்பார்கள் என்று நம்புகிறோம்.

—தமிழ்நாடு பூமிதானக் கமிட்டி

PUBLIC ...
4 - JUN 1957

# வினோபா பாவே

## அல்லது

# உலகுக்கு ஒருவர்

---

## 1. காந்திக்குப்பின் காந்தி.

"அதோ போகிறாரே, அவர் யார் தெரியுமா?"

"அவர்தான் வினோபா பாவே"

"இல்லை, காந்தி போகிறார்"

"காந்திதான் இறந்துபோனாரே!"

"மகாத்மாக்கள் இறப்பதில்லை என்பதை நீ அறியாய்போலும்"

இது வினோபா பாவே உத்தரப் பிரதேசத்தில் நடந்துபோய்க் கொண்டிருக்கையில் அவரைப்பார்த்து இரு கிராமவாசிகள் பேசிக் கொண்ட பேச்சாகும். ஆம், வினோபாஜியின் வார்த்தைகளையும் செய்கைகளையும் கவனிக்கையில் காந்தி இருக்கிறார் என்பதில் சந்தேகம் என்ன?

எத்தனை எத்தனையோ நூற்றாண்டுகளுக்கொருதரம் சாதாரணமாக புத்தரைப்போல், இயேசுகிறிஸ்துவைப்போல், ராமர், கிருஷ்ணனைப் போல் மகான்கள் தோன்றுகிறார்கள். "காந்தியைப் போல் இனி ஒரு காந்தியைப் பார்க்கப்போகிறோமா? காந்தி இருந்திருந்தால் நம் நாடு இப்படியா இருக்கும்?" என்று பலர் சொல்ல நாம் கேள்விப் படாமல் இல்லை. ஆனால் நமது நாட்டின் விசேஷம், இதோ வினோபாஜி ரூபத்தில் மற்றொரு மகாத்மா வழிகாட்ட வந்துவிட்டார். இப்போதில்லா விட்டாலும் சீக்கிரம் இதன் உண்மையை எல்லோரும் தெரிந்துகொள்ளுவது நிச்சயம்.

உலகம் நல்வழிப்படுவதற்கு ஒரு சத்தியாக்கிரஹி போதும் என்று மகாத்மா காந்தி அடிக்கடி சொல்வதுண்டு. அது விநோபாஜி விஷயத்தில் முற்றிலும் சரியென்றே தோன்றுகிறது. தனி மனிதன் ஒருவனுல் ஒரு ஊரோ, நாடோ, ஒரு சமூகமோ மேம்பாடடைவதை நாம் அறிவோம். சூரியன் ஒருவனுல் உலக முழுவதும் ஒளி பெறுவது போலவும், மகாத்மாஜி தலைமையில் நம் நாடு விடுதலைபெற்றது போலவும், விநோபாஜி தலைமையில் ஒரு அஹிம்சைப் புரட்சி உண்டாகி, புது சகாப்தத்தை உலகம் காணப்போகிறது.

ஆள் ஐந்தடி எட்டங்குல உயரம்; ஆனால் எண்பத்திஆறு ராத்தல் எடைதான்; காந்திஜியைக் காட்டிலும் ஒல்லியான உடம்பு; தலையில் கருத்த ரோமம்; வெள்ளைத்தாடியும் மீசையும்; நிமிர்ந்த பார்வை; குளிர்ந்த கண்கள், பொக்கை வாய்; திறந்த மார்பு; ஒட்டிய வயிறு; நீண்ட கைகள்; விரைந்த கால்கள்; இடுப்பில் முழங்காலுக்கு மேல், தானே நூற்று, தானே நெய்த கதராடை. இவையே இவருடைய அங்க லக்ஷணங்கள்.

விநோபாஜி சுத்த பிரம்மச்சாரி; உயிர்களிடத்தில் மிகுந்த கருணையுடையவர்; மக்களிடத்தில் தூய அன்பு நிறைந்தவர். கர்மம், பக்தி, ஞானம் ஆகிய மூன்றும் ஒன்று சேர்ந்த மகாயோகி; தவசிரேஷ்டர்; பஞ்சேந்திரியங்களை வென்றவர்; உலகம் கலங்கினுலும் கலங்காத உள்ளமுடையவர்; நினைப்பும் பேச்சும் செயலும் ஒத்தவர்; சதா சுறுசுறுப்புள்ளவர்; ஆனால் சாந்தசொரூபி. உலகமக்களும் தானும் ஒன்று என்று நினைக்கிறார். மேடையில் பேசும்போது கண்களை மூடிக்கொள்கிறார். உள்ளத்தில் உதிப்பதை உதிக்கிறபடி பேசுகிறார். உழைப்பது, உண்பது, உறங்குவது எதிலும் கணக்காயிருக்கிறார். தயிர் அல்லது பால், சில சமயம் பழம் இவருக்கு ஆகாரம். சரியாய் காலை மூன்று மணிக்கு எழுந்துவிடுகிறார். இரவு ஒன்பது மணிக்குத் தூங்குகிறார். காந்திஜியிடமாவது ஒரு கடிகாரம் இருந்தது. இவரிடம் அதுகூட இல்லை. இவரே ஒரு கடிகாரம் போல் விளங்குகிறார். கணக்கு இவருக்கு கடவுளுக்கு அடுத்தபடியாகும். கடவுளும் ஒரு கணக்குத்தானே! விநோபாஜி தூங்கும்போது இறக்கிறார். விழிக்கும்போது பிறக்கிறார். கடுமையான சுய சோதனைகளால் சில சமயம் உடல் கோளாறு அடை

கிறார். சமீபத்தில் இரத்த அழுக்கம். மலேரியா ஜுரம் வந்ததுபோல். ஆனால் அப்படிப்பட்ட வேளைகளில கூட அவர் மருந்து சாப்பிடுவதில்லை. எனினும் இவருடைய உயிருக்காகக் கவலைப்பட்ட மக்களின் ஏகோபித்த விருப்பத்தைக் கடவுள் விருப்பமாகக் கருதி சமீபத்தில் மருந்து சாப்பிட்டார். இவர் சட்டை, துண்டு போடுவதில்லை. அவற்றைத்தரிப்பது கூட இவருக்குக் கனமாயிருக்கிறது. உடம்பைக்கூட மறந்திருக்கிறார். மழை, குளிர், வெயில் எதையும் பொருட்படுத்துவதில்லை.

## 2. பிறப்பு வளர்ப்பு

1894-ம்ஞு செப்டம்பர்மீ 11ந்தேதி மஹாராஷ்டிரப்பிரதேசத்தில் கொலாபா ஜில்லா, ககோடா கிராமத்தில் சரஸ்வத் பிராமண குலத்தில் விநோபாஜி பிறந்தார். இவருடைய தகப்பனார் ஓர் சாயத்தொழிற்சாலை குமாஸ்தா. பெயர் நரஹரி பாவே. தாயார் பெயர் ருக்மணி. அவர் மிகவும் தெய்வபக்தியுள்ளவர். விநோபாஜியின் முழுப்பெயர் விநயக விநோபா பாவே. அவருடன் பிறந்தவர்கள் நாலவர். ஒரு சகோதரி; மூன்று சகோதரர்கள். கடைசி சகோதரர் சிறு வயதிலேயே இறந்து போனார். இரண்டாவது சகோதரர் பெயர் பாலகோபா பாவே. மற்றொருவர் பெயர் சிவாஜி பாவே. விநோபாஜியைப்போல் இவ்விருவரும் பிரமச்சாரிகளே. ஒரு குடும்பத்தில் மூன்றுபேரும் பிரம்மச்சாரிகளாயிருப்பது என்றும் எங்குமில்லாத அதிசயமாகும். பால்கோபா பாவே புனாவுக்கருகில் உருலி என்னும் இடத்தில் காந்திஜி ஆரம்பித்த இயற்கை வைத்தியசாலையை நடத்திவருகிறார். உலக உத்தமனைப் பெற்ற புண்ணியவதி 1918-ம் ஆண்டு காலமானார்.

விநோபாஜியின் தாயார் தன் குழந்தைகளுக்கு அடிக்கடி சாதுக்களின் சரித்திரங்களைச் சொல்லிக்கொடுப்பாராம். ஒழுக்கம் எவ்வளவு முக்கியம் என்பதையும் எடுத்துக்காட்டுவாராம். பெரும்பாலும் தாயாரின் குண விசேஷங்களே விநோபாஜியிடம் பதிந்திருக்கின்றன. சிறு வயதில் ஒருநாள் விநோபாஜி தன் தாயாரிடம் "எதற்கம்மா வந்தவர்களுக்கெல்லாம் உணவளிக்கிறாய்?" என்று கேட்டார். "மகனே, பிச்சைக்கு வருகிறவர்களில் கடவுளும் இருந்துவிடலாம்" என்றார்

தாயார். மற்ருெரு சமயம் "ஏன் அம்மா! அந்தக் காலத்தில் ராமன், கிருஷ்ணன் தோன்றியதைப் போல இக்காலத்திலும் தோன்றவில்லை" என்று விஞேபாஜி கேட்க, "அப்படியில்லை அப்பா! இப்போதும் மகான்கள் இருக்கத்தான் செய்வார்கள்; அவர்களில்லாவிட்டால் உலகம் ஏது?" என்று அந்த அம்மாள் பதிலளித்தாராம். தான் பெற்ற பிள்ளையும் அவர்களில் ஒருவர் என்பதை அவ்வுத்தமி அவரின் அவ்வளவு சிறு வயதில் எப்படி அறிவார்! ஆயினும் அந்த அம்மாள் சொன்னதில் உண்மையுண்டு,

சிறு வயதில் விஞேபாஜி சேஷ்டைகள் செய்வதும் உண்டாம். தகப்பஞரிடம் அதற்காக அடியும் வாங்குவாராம். இவர் ஆரும் வகுப்புவரை முதல் மாணுக்கஞக இருந்திருக்கிருர். பிறகு வர வர படிப்பில் உற்சாகம் குன்றிஞர். எனினும் பரீட்சைகளில் தேர்ச்சி பெற்றுவிடுவார். அறிவு பெருகிக்கொண்டுதான் வந்திருக்கிறது. இடையில் சிறிதுகாலம் தகப்பஞர் வேலை பார்த்த தொழிற்சாலையில் சாய இலாகாவில் வேலை பார்த்தார். இவருக்குத் தொழிற்கல்வி கற்பிக்க வேண்டுமென்று தகப்பஞருக்கு ஆசை. ஆஞல் அது நிறைவேற வில்லை. விஞேபாஜி மறுபடியும் படிக்கலாஞர். அழியாத கருத்துக்களை யுடைய சில நூற்களைமட்டும் இவர் வாசிப்பது வழக்கம். கல்லூரியில் சிலகாலம் படித்தார். கணக்கும், தத்துவ ஞானமும் இவருக்குப் பிரிய மான பாடங்கள். இவருடைய ஞாபகசக்தி மிக அபாரமானது.

விஞேபாஜி இளமையிலேயே சுறுசுறுப்பும், கொள்கையில் தீவிர மும் கொண்டிருந்தார். உயர்தரப்பள்ளி மாணுக்கஞயிருக்கும்போது நூல்களை வெகுநேரம் படித்து, பின் அதிக தூரம் உலாவச்செல்வதை வழக்கமாகக்கொண்டிருந்தார். பரோடாவிலுள்ள உலகப் பிரசித்தி பெற்ற பெரிய புத்தகசாலையில் மணிக்கணக்காக ஆராய்ச்சியில் ஈடுபட் டிருப்பார். தன் பெற்ருேர்கள் ஊர்களுக்குப் போஞல் விஞேபாஜி அவர்களுடன் போவதில்லை. அக்காலங்களில் புத்தகசாலையில் படிப் பதையே வேலையாகக் கொள்வார். "நான் வீட்டில் பன்னிரண்டு வயது வரை கௌபீனம் கட்டிக்கொண்டே திரிவேன்; பள்ளிக்கூடம் விட்டு வந்ததும் வேஷ்டியைக்கழற்றி எறிந்துவிடுவேன்; நகரத்தில் படிக்க வந்தபோது எப்பொழுதும் வேஷ்டி உடுத்த வேண்டுமென்ற நிர்ப்பந்தம்

மிகக் கஷ்டமாயிருந்தது; சட்டை இருந்தாலும் அதைக் கழற்றித் தோளில் போட்டுக்கொண்டுதான் திரிவேன்'' என்று சொல்வார். இவ் விதம் ஒருநாள் விநோபாஜி சட்டை போடாது பரோடா புத்தகசாலையில் படித்துக்கொண்டிருந்தார். நூல்நிலையக் காப்பாளர், ''இவ்விதம் மேல் ஆடையின்றி இருப்பது நாகரீகக் குறைவு; நிலைய சட்டத்திற்கு விரோத மும் ஆகும்'' என்றார். அதற்கு விநோபாஜி ''சட்டையை அணிந்து கொண்டுதான் படிக்கவேண்டுமென்ற உங்கள் சட்டத்தைக்காண்பி யுங்கள்'' என்றார். இந்த பதிலைப் பொறுக்கமுடியாத நிலையக்காப் பாளர் ஆங்கிலேய சூப்பிரண்டெண்டிடம் இவரை அழைத்துச் சென்றார். பதினைந்தே வயதாகிய இளைஞனை வெள்ளையர் ஏற இறங்கப்பார்த்தார். விநோபாஜியும் கொடிய வெப்பத்தில் ''கோட் சூட்'' அணிந்துகொண்டு வியர்த்து மின்சார விசிறிக்குக் கீழ் உட்கார்ந்திருந்த துரையைப் பார்த் தார். ''இவ்விதம் மேல் ஆடையில்லாமல் இங்கு படிப்பது நாகரிகமல்ல'' என்று துரை சொன்னார். விநோபாஜி மிகவும் நிதானமாக, ''சிறியவர் களாயிருந்தாலும் பெரியவர்கள் உட்காரச்சொல்லித்தான் பேசுவது எங்கள் நாட்டின் நாகரிகம்' என்று ஆங்கிலத்தில் பதிலளித்தார். சூப்பிரண்டெண்டுக்கு ஆச்சரியமாகிவிட்டது. நாற்காலி கொடுத்து உட்காரச்சொன்னார். பின் விநோபாஜி அவருடன் சில நிமிஷங்கள் பேசி இந்நாட்டின் இயற்கையையொத்த உடை நாகரிகத்தை விளக்கி னார். துரை ஒப்புக்கொண்டு தட்டிக்கொடுத்து அனுப்பிவிட்டார். விநோபாஜி சிறுவயதிலிருந்தே தைரியமும் துணிச்சலும் உள்ளவரா யிருந்தார்.

மாணவராக இருக்கும்போதே மக்களின் வறுமையையும் கிராமப் பொருளாதாரத்தையும் கருத்தூன்றிக் கவனித்தார். கல்லூரியில் பொருளாதார சாஸ்திரங்களைப் படித்துக்கொண்டிருந்தாலும் மனம் கிராமப்பொருளாதாரத்தில் பதிந்திருந்தது. இன்டர்மீடியட் வகுப்பு படித்துக்கொண்டிருந்தபோது ஒரு நாள் வகுப்பில் மாணவர்கள் கூடி யிருந்தனர். ஆங்கிலப்பாடம் நடக்கவேண்டிய நேரம். பாடத்திற்குரிய ஆங்கில ஆசிரியர் வகுப்புக்கு வராமல் 'Indisposed' என்று கடிதம் எழுதி அனுப்பிவிட்டார். மாணவர்கள் தாங்களே வகுப்பு நடத்த முடிவு செய்தார்கள். விநோபாவையே வகுப்பு எடுத்து நடத்தும்படி மாணவர்கள் கேட்டுக்கொண்டனர். மாணவ விநோபா ஆசிரியரானார்.

அன்று நடக்கவேண்டிய ஆங்கிலக் கவியை அருமையாக விளக்கினர். மாணவர்களுக்கு பாடம் நன்ருகப் புரிந்ததால் ஒரே மகிழ்ச்சி. வகுப்பு முடிவதற்கு இன்னும் சில நிமிடங்களிருக்கின்றன. விஞேபா தொடர்ந்து, "நான் உங்களுக்கு இன்று புதிய பொருளாதாரம் சொல்லப்போகிறேன். நமது ஆங்கிலப்பாட ஆசிரியருக்கு மாதம் ரூ. 1100 சம்பளம்; தினம் ஐந்து மணி நேரம் வீதம் வாரத்திற்கு ஐந்து நாட்கள் வேலை செய்கிருர்; இவ்வீதம் மாதத்திற்கு 100 மணி நேர வேலை செய்யும் இவருக்கு மணிக்கு என்ன வருமானம் என்பதைக் கணக்குப்போட்டுப் பாருங்கள். நமது கிராம மக்களுக்கு தினசரி நாலணு வருமானம் கிடைப்பதே அரிது. இவ்விதம் ஏற்றத்தாழ்வின் சின்னமாகிய கல்லூரிப் படிப்பில் என்ன பிரயோஜனம்? என்று வகுப்பை முடித்தார்.

இவ்விதப் புரட்சிக் கருத்துக்களையுடைய விஞேபா விரைவில் கல்லூரிப் படிப்பிற்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டிய சமயம் நெருங்கிற்று. திலகரின் அரசியல் கிளர்ச்சி இவரைக் கவர்ந்தது. அவர்மீது பக்தி கொண்டார். வெள்ளைக்காரர்மீது வெடிகுண்டு வீசும் நோக்கத்தோடு மாணவர் சங்கம் ஒன்று நடத்தினர். பள்ளிப்படிப்பில் வெறுப்பு அதிகமாயிற்று. ஒருநாள் ஹோலிப்பண்டிகையன்று விளக்கின் முன்னல் உட்கார்ந்துகொண்டு தன்னுடைய "சர்ட்டிபிகேட்களை" ஒவ்வொன்ருகக் கொளுத்திக்கொண்டிருந்தார். அதைக்கண்ட தாயார், "என்ன செய்துகொண்டிருக்கிருய்" என்று கேட்டபோது விஞேபா மிகவும் சாந்தமாக "நான் படித்தவன் என்ற அகங்காரத்திலிருந்து விடுபடுவதற்காக இந்தத் தகுதிப்பத்திரங்களை அழித்துக்கொண்டிருக்கிறேன் அம்மா! இந்தப் பத்திரங்களைக்கொண்டா நான் பிழைக்க வேண்டும்? என்ருர். அதுமுதல் இவருடைய துறவு மனப்பான்மை அதிகமாயிற்று.

## 3. ஆசிரம வாழ்வு

1916-ம்ஆண்டு பம்பாயில் விஞேபாஜி இண்டர்மீடியட் பரீட்சை ஒன்று எழுதவேண்டியிருந்தது. இவர் பரீட்சைக்குப்போவது போல் புறப்பட்டு, சபர்மதியில் மகாத்மா காந்தி அதே வருஷம் ஆரம்பித்திருந்த சத்தியாக்கிரக ஆசிரமம் போய்ச்சேர்ந்தார். நூற்கப்பழகினர். தோட்டி வேலையைக்கேட்டு வாங்கினர். ஆசிரம அறைகள், முற்றங்

கள், கக்கூஸ்கள் இவற்றைச் சுத்தமாய் வைத்திருத்தலே இவர் வேலை. "தன்வேலையுண்டு தானுண்டு". யாரோடும் அளவளாவுவதில்லை. கடுமையான உழைப்பின் காரணமாக உடல் நலம் குன்றியதால் காந்திஜியின் அனுமதிபெற்று வாய் என்னும் ஆரோக்கிய ஸ்தலத்துக்குச் சென்றார். வாய் மகாபலேஸ்வரக் குன்றுக்கடியில் கிருஷ்ண நதியருகே யுள்ளது. அது இவருடைய குலதெய்வம் கோயில்கொண்டருளிய ஊராகும். உடம்பு தேறவும் அங்கே சமஸ்கிருத பண்டிதர் ஒருவரிடம் வேதாந்தப் பாடம் கேட்டார். பிறகு காசிக்குப்போய் சமஸ்கிருதம் பயின்றார். சரியாக ஒருவருடம் கழித்து ஆசிரமம் திரும்பினார்.

1917-ம் ஆண்டு காலஞ்சென்ற தீனபந்து சி. எப். ஆண்ட்ரூஸ் சபர்மதி ஆசிரமம் போயிருந்தார். அங்கே காந்திஜியும் விநோபாஜியும் மிகுந்த அந்நியோந்நியமாய்ப் பேசிக்கொண்டிருந்ததைக் கண்டார். விநோபாஜி போய்விட்டவுடன், ஆண்ட்ரூஸ் காந்திஜியிடம் "பாபுஜி சற்று முன் தங்களிடம் பேசிக்கொண்டிருந்தாரே அவர் யார்? என்றார். அதற்கு காந்திஜி "ஆசிரமத்திற்கு வருகிறவர்கள் பொதுவாக ஆசீர்வாதம் பெற வருவார்கள்; ஆனால் இவரோஎங்கள் ஆசிரமத்தையே ஆசீர்வதிக்க வந்தவர், இவர் பெயர் விநோபா" என்றார்.

## காந்திஜி—விநோபாஜி ஆத்ம உறவு

அடியிற்கண்ட கடிதப் போக்குவரத்திலிருந்து காந்திஜிக்கும் விநோபாஜிக்குமிடையிலிருந்த ஆத்ம உறவு எத்தகையது என்பது விளங்கும். 1918ம் ஆண்டு ஏப்ரல் மீ 10உ விநோபாஜி மகாத்மா காந்திக்கு எழுதிய கடிதமாவது:—

"அதிகமாய் என்ன சொல்லப்போகிறேன்? நான் சொப்பனம் காணும்போதெல்லாம் கடவுள் என்னிடமிருந்து ஏதாவது வேலை வாங்கு வாரா என்ற ஒரே எண்ணம்தான் என் மனதில் உதிக்கிறது. ஆசிரம விரதங்களை நான் அப்படியே அனுசரித்து வாழ்க்கை நடத்தி வருகிறேன் என உறுதிகூறமுடியும். அதாவது நானே ஆசிரமத்திற்குரியவன் ஆசிரமமே எனக்கு சாதனமாயிற்று."

## அதற்கு மகாத்மாஜி பதில் எழுதியதாவது:

"கடவுள் உங்களுக்குத் தீர்க்காயுள் அளிப்பாராக. பாரதநாட்டின் உன்னதப்பெருமைக்கு நீங்கள் உபயோகமாயிருப்பீர்களாக."

15 வருடம் கழித்து விநோபாஜி மறுபடியும் மகாத்மாஜிக்கு ஒரு கடிதமெழுதினர். அதாவது:—

"இந்த பூலோகத்தில் தங்களின் ஆசீர்வாதம் ஒன்று மட்டும் இல்லாதிருக்குமானல் எனக்கு எல்லாம் சூன்யமேயாகும். இந்த 12 வருடங்களும் ஆசிரம விரதங்களை அனுஷ்டிப்பதல் நான் இடைவிடாத முயற்சி செய்து வந்திருக்கிறேன் எனச்சொல்லமுடியும். இருப்பினும் என்னிடம் எவ்வளவோ குறைகளை நான் காணவே செய்கிறேன். கடவுளிடம் எனக்கு எவ்வளவு பக்தி உண்டோ அவ்வளவுக்குச் சற்று அதிகமாகவே அவர் என்னிடம் கிருபை வைத்திருப்பதைப் பார்க்கவும் செய்கிறேன்."

"தங்கள் ஆசீர்வாதத்தால் நான் முற்றிலும் தன்யனுனேன் என்பதை அறிவேன். ஆயினும் அவ்வாசீர்வாதத்தை யாசித்தே இக்கடிதம் எழுதுகிறேன். தங்களின் இந்த எளிய ஊழியனை ரட்சிப்பீர்களாக. தாங்கள் இயற்றிவரும் மகாயாகத்துக்கு நான் பலிப்பொருளாகும் வரத்தை ஈஸ்வரனிடமிருந்து எனக்கு வாங்கித்தருவீர்களாக."

## உருக்கத்துடன் பாபுஜி எழுதிய பதிலாவது:

"தங்களின் பக்தியும் சிரத்தையும் என் கண்களில் ஆனந்தக் கண்ணீர் பெருகச் செய்கின்றன. தங்கள் விருப்பத்தை நிறைவேறச் செய்ய நான் தகுதியுடையவனுக இருந்தாலும், இல்லாவிட்டாலும், தாங்கள் பெரியதொரு சேவைக்கு ஆளாவது நிச்சயம்."

ஒரு சமயம் மகாத்மா காந்தி வெளியூர் சென்றிருந்தார். மாலைப் பொ[illegible] ஆசிரமவாசிகள் கூடி பகவத் கீதையில் சில சுலோகங் [illegible]ரதோ மாருகப் பொருள் செய்துகொண்டிருந்தார்கள் போலும். [illegible]லிருந்து அதைக் கேட்டுக்கொண்டிருந்த விநோபாஜி சும்மா

விருக்க முடியாமல் யாரும் எதிர்பாராதவிதமாக "இல்லை அவ்வித மில்லை. அந்த சுலோகங்களுக்குப் பொருள் எனக்கு இன்னவிதமாகத் தெரிகிறது" என்றார். அதைக்கேட்டதும் மற்றவர்கள் மிகுந்த ஆச்சரியமுற்றனர். காந்திஜி ஆசிரமத்திற்குத் திரும்பிவந்ததும், ஓடோடி அவரிடம் இந்த விபரத்தைச் சொன்னார்கள். காந்திஜியும் மிக ஆச்சரியமடைந்தார். ஆசிரமவாசிகளின் கூட்டம் நடைபெற்றது. அதுமுதல் ஆசிரமவாசிகளுக்கு வினோபாஜி கீதா வகுப்பு நடத்த வேண்டியதென்று தீர்மானமாயிற்று. இவரும் சரி என்றார். இதைப் பற்றி காந்திஜி ஆண்ட்ரூஸிடம் கூறுகையில், "அவர் கீதாபாடம் சொல்லும்போது நாங்கள் யாவரும் அவருடைய காலடியிலிருந்து மிக கவனமாகக் கேட்போம்" என்றார். இதன் முழு விபரம் 1923ம்-ஆண்டு எரவாடா ஜெயிலில் காந்திஜி ஆறுவருட சிறைத்தண்டனையை அனுபவித்துக்கொண்டிருக்கையில் அவருடைய "யங் இந்தியா" பத்திரிக்கையில் தீனபந்து ஆண்ட்ரூஸால் எழுதப்பட்டிருக்கிறது. அப்போது ராஜாஜி அதன் ஆசிரியராயிருந்தார்.

வினோபா பாவேயும் வர்தா வள்ளல் ஸ்ரீஜம்னாலால் பஜாஜும் அதே சமயம் நாகபுரி கொடிப் போராட்டத்திலீடுபட்டு சிறை சென்றிருந்தனர், பஜாஜின் விருப்பத்திற்கிணங்க 1923-ம் வருடத்திலேயே வினோபாஜி சபர்மதியை விட்டு வர்தாவுக்கருகில் பௌனார் என்னுமிடத்தில் ஆசிரமம் ஸ்தாபித்து அதில் வசித்து வரலானார்.

1925-ம்ஆண்டு பொதுப்பாதையில் யாவரும் நடந்து செல்லும் சம உரிமைக்காக நடந்த வைக்கம் போராட்ட முகாமில் சில நாள் தங்கியிருந்தார். 1930-32ல் சுதந்தரப் போராட்டங்களில் பங்கெடுத்துக் கொண்டார். 1938-ம்ஆண்டு மதுரை ஸ்ரீ மீனாட்சி ஆலயம் ஹரிஜனங்களுக்குத் திறந்துவிடப்பட்ட அற்புதத்தை நேரில் அறிய வந்தார். ஸ்ரீ மீனாட்சியைத் தரிசித்தார்.

நூற்புக் கலையில் நிபுணரானார். உலக மக்கள் அனைவரையும் அறிந்து அவர்களுடன் தன்னை ஐக்கியப்படுத்திக் கொள்வதற்காக இஸ்லாம், பௌத்தம், கிறிஸ்துவம் ஆகிய மதவேதங்களை அவற்றின் மூல பாஷைகளில் படித்தறிந்தார். இலக்கண இலக்கியத்தோடு பல

பாஷைகள் கற்ருர். அவருக்குத் தமிழுடன் மொத்தம் பதினேழு பாஷைகள் தெரியும். சர்வோதய சமுதாயத்திற்கு ஆதாரமான ஆதாரக் கல்வித்திட்டத்தை தயாரிப்பதில் காந்திஜிக்கு உதவியாயிருந் தார். குஷ்டரோகிகளுக்குத் தொண்டு செய்தார். ராட்டை அஹிம் சையின் சின்னம் என்பதை தனது அனுபவத்தால் நிருபித்தார். எவ்வித தியாகங்களுக்கும் தயாராகவுள்ள தொண்டர்கள் பலரைத் தயாரித்தார்.

## 4. முதல் சத்தியாகிரஹி.

1941-ம் வருஷம் நடைபெற்ற யுத்த எதிர்ப்பு-அதாவது தனி நபர் சத்தியாக்கிரஹத்திற்கு வினோபாஜியை மகாத்மாஜி முதல் சத்தியா கிரஹியாகத் தேர்ந்தெடுத்தார். பிரபல தலைவர்கள் இருக்க முன் பின் தெரியாத யாரோ ஒருவரை காந்திஜி ஏன் தெரிந்தெடுக்க வேண்டும் என்று பலர் ஐயுற்றனர். சத்தியாகிரஹி என்ற சொல்லுக்கு அவரே தகுதிவாய்ந்தவர் என்று காந்திஜி உறுதி செய்தார். ஜவஹர்லால் நேருஜி இரண்டாவதாக தேர்ந்தெடுக்கப்பட்டார். காந்திஜி வினோ பாஜியை முதல் சத்தியாக்கிரஹி என்று குறிப்பிட்ட மாத்திரத்தில் அவர் உலகப் பிரசித்தரானுர். 1917-ம் வருஷம் ஆண்ட்ரூஸிடம் வினோ பாஜீயைப்பற்றி காந்தியடிகள் சொன்னதும், பின் 25 ஆண்டுகளுக் பிறகு அவரையே சத்தியாகிரஹி நம்பர் ஒன்று எனச் சொன்னதும் நாம் வினோபாஜியை **உலகுக்கு ஒருவர்**, என்று சொல்லப் போது மானவை என்பதை யாரும் ஒப்புக்கொள்வர்.

முதல் சத்தியாக்கிரஹி என்ற முறையில் வினோபாஜி சர்க்கார் தடையுத்தரவை மீறி மும்முறை சிறை சென்ருர். சிறைச்சாலையை உண்மையாகவே தவச்சாலையாகக் கொண்டவரை எத்தனை தடவை, எவ்வளவு காலம் சிறையில் வைத்தால்தான் என்ன! இவருடைய சிறை வாசத்தின் பயனுக 'கீதா பிரவசன்' என்னும் அரிய பொக்கிஷம் உலகுக்குக் கிடைத்தது. சிறையில் சத்தியாக்கிரஹிகளுக்கு வாரம் ஒருமுறை வினோபாஜி செய்த கீதா உபந்நியாசங்களின் திரட்டே அப் புத்தகமாகும். பல பாஷைகளில் அது வெளியிடப்பட்டது. இப் போது தமிழிலும் அது "கீதைப் பேருரைகள்" என்ற பெயரில் வெளி

வந்திருக்கிறது. தன் தாயாருக்குப் புரியும் விதத்தில் கீதையை எழுதினால் சொற்ப கல்வியறிவுடைய எளிய மக்களும் படித்துப் பயன் பெறுவார்கள் என்ற நோக்கத்தோடு 'கீதாயி' என்ற மகாராட்டிய கீதையை இயற்றினார். லட்சக்கணக்கான அதன் பிரதிகள், பல பதிப்புகளுடன் இதுவரை அச்சிடப்பட்டு செலவாகியிருக்கின்றன.

1942-ம் ஆகஸ்டு புரட்சி ஆரம்பிக்கவும் சர்க்கார் விநோபாஜியைக் கைது செய்து, தெய்வச் செயலால் தமிழ் நாட்டில் வேலூர் ஜெயிலில் பாதுகாப்புக் கைதியாக வைத்தனர். விநோபாஜி அங்கு வந்து சேர்ந்தவுடன் சிறை சூப்பரின்டெண்டிடம் இரண்டு விஷயங்களுக்கு விண்ணப்பித்துக்கொண்டார்; ஒன்று க்ஷவரம் செய்து கொள்வது; மற்றொன்று தமிழ் கற்க வசதி செய்வது. தான் தமிழ் நாட்டின் உப்பை தின்னப்போவதால் தமிழரோடு உறவுகொள்ள வேண்டுமென்று தமிழ் கற்க முடிவு செய்தார். முதல் முதலில் வார்டர் ஒருவரிடம் தமிழ் கற்றார். சில நாட்களில் தமிழ் சத்தியாக்கிரஹி ஸ்ரீ யக்ஞேஸ்வர சர்மா இவருக்குத் தமிழ் கற்பிக்க அனுமதிக்கப் பட்டார். சிறிது காலத்துக்குள் இலக்கணத்தோடு தமிழ் எழுதவும் படிக்கவும் கற்றுக்கொண்டார். தமிழ் என்னும் பதத்தில் 'ழ்' என்னும் அமிழ்தம் இருக்கிறது என்று வடஇந்திய நண்பர்களுக்கு இவர் சொல்வதுண்டு. திருக்குறள், ஔவையார், பாரதி ஆகிய அருட் புலவர்களின் பாடல்களைப் படித்தறிந்தார். • இப்போது பூமிதான யாத்திரையில் திருக்குறள் படித்துவருகிறார். ஹிந்தி சர்வோதய பத்திரிகையில் மாதம் ஒரு குறள் பாவுக்கு வியாக்கியானம் எழுதி வருவதும், சமீபத்தில் பீஹாரில் மலைப்பிரதேசத்தில் யாத்திரை செய்யும்போது "கிருஷ்ணம்மா! இது மார்கழி மாதமல்லவா, ஆண்டாள் திருப்பாவை பாடு" என்று சொன்னதும் நம் தமிழ் நாட்டுப் பாடல்களின் மீது இவருக்குள்ள காதல்தான் என்ன என்று நம்மை வியப்படையச் செய்கிறது. நமது கோயில்களையும், காவேரி முதலிய நதிகளையும், அரும் பெரும் புலவர்களையும் பற்றிக் கேட்டமாத்திரத்தில் பரவசமாகிறார். ஸ்ரீஜெகந்நாதன் அவர்களுக்கு எழுதிய கடிதம் ஒன்றில், தமிழ்ச்சங்கம் தோன்றிய மதுரை, பூமிதான யக்ஞத்தை வெற்றிபெற நடத்தும் என்பதில் சந்தேகமில்லை என்று குறிப்பிட்டிருக்கிறார். நமது மொழிக்கும் நமது

பண்பாட்டுக்குமுள்ள சம்பந்தத்தை விநோபாஜி தெரிந்திருப்பதுபோல தமிழ் மக்களில் பலர் அறிந்திருப்பது சந்தேகம்.

சிறையிலிருந்து விடுதலை பெறும்போதெல்லாம் விநோபாஜி ஆசிரமத்துக்குள் புகுந்துவிடுவது வழக்கம். யுத்தத்திற்குமுன் இந்தியருடைய சராசரி நாள் வருமானமாகிய இரண்டணு செலவில் தன் உணவை சரிக்கட்ட முயன்றார். ஆயினும் நாளொன்றுக்கு எட்டு மணி நேரம் நூற்போருக்கு குறைந்த பட்சம் எட்டணு கூலி கிடைக்க வழி செய்தார். சுயதேவைக்காகத் தானே நூற்கும் புதுக் கதர்த் தத்துவத்தை சர்க்கா சங்கத்தில் காந்திஜி புகுத்தியதற்கும் காரணமானார். தானே பரிசோதித்தறியாதது, அனுஷ்டிக்காதது எதையும் மற்றவருக்கு உபதேசிக்கும் வழக்கம் விநோபாஜியிடம் கிடையாது.

## 5. விநோபாஜி வெளிக்கிளம்புதல்.

அவனன்றி ஓரணுவும் அசையாது. 1948-ம் ஹு ஜனவரிமாதம் 30உ ஓர் துப்பாக்கி வெடித்தது. மகாத்மாவின் உடல் கீழே விழுந்தது. தலைவர்கள் எல்லோரும் டெல்லிக்கு ஓடினார்கள்; கண்ணீர் விட்டனர். பாரதநாடே பெருமூச்செறிந்தது. அப்போது விநோபாஜி பௌனர் ஆசிரமத்திலேயிருந்தார். காந்திஜி இறந்த செய்தி கேட்டதும் ஆசிரமவாசிகளைக் கூட்டிப் பிரார்த்தனை நடத்தினார். பிரார்த்தனைக்குப் பிறகு ஆசிரமவாசிகளுக்குத் தைரியம் சொன்னார். அதுமுதல் தொடர்ந்து பதின்மூன்று நாட்கள் தினமும் மாலையில் அவர்களுக்கு முக்கிய உபதேசங்களைச் செய்தார். அவற்றின் சாராம்சம்:

"பாகவதத்தில் 'சாவுக்கு அஞ்சிய குருவும் அவருக்காக அழுத சீடர்களும்' என்ற கதையுண்டு. தன் அந்திய காலம் வந்துவிட்டதே என்று குரு அழுதார், அதைப்பார்த்து சிஷ்யர்களும் அழுதனர்." காந்திஜியோ, சாவுக்கு அஞ்சாது வீர மரணமெய்தினார். நாம் அவருடைய அழும் சீடர்களாக இருந்து விடலாகாது. நாம் நாற்பது கோடி மக்களும் காந்திஜியின் போதனைகளைக் கடைப்பிடித்து பரஸ்பரம் அன்புகொண்டு ஒன்றுபடவேண்டும். நம் நாட்டில் ஹிம்சைக்கு மதிப்புண்டானால் வந்த சுயராஜ்யம் நிலைபெறாது. வீரம் மிக்க

அஹிம்சையை நாம் இப்போதே பயிலவேண்டும். உலகம் இந்தியாவின் உதவியை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது. விஞ்ஞானத்தில் அபார சக்தியிருக்கிறது. அதை ஹிம்சையிலிருந்து பிரித்து அஹிம்சையுடன் சேர்த்துவிடவேண்டும். காந்திஜி நமது சுமைகளையல்லவா சுமந்து நமக்காக இறந்தார்? இக்கொலையின் பொறுப்பு நம்மையே சாரும். நம் உள்ளத்தை நாம் திருத்திக்கொள்வதே அதற்குப் பிராயச்சித்த மாகும். உலக மக்களுக்கு இப்போது ஹிம்சையில் அலுப்பேற்பட் டிருக்கிறது. ஆயினும் அதிலிருந்து விடுபடுவதற்கு வழி தெரியாமல் திண்டாடுகிறார்கள். இந்திய நாகரிகத்தையும் கலாசாரத்தையும் கவ னிக்கையில் இந்தியாவே உலகுக்கு வழிகாட்டுமென்று நம்புகிறேன்.

"சுதர்த் தத்துவத்தை ஒவ்வொருவரும் நன்குணர்ந்து அதைத் தம் வாழ்க்கையுடன் அமைத்துக்கொள்ள வேண்டும். ஏழை எளிய வர்களுக்கு ஊழியம் செய்யுங்கள். 'இவன் இறந்து போனான்; ஆனால் நமக்கு உழைத்தே இவன் இறந்தான்' என்று பிறர் சொல்லும்படியாக உழையுங்கள்." வினோபாஜியின் இந்த உபதேசங்களில் காந்திஜியின் குரல் கேட்கிறதல்லவா?

ஆசிரமத்திலிருந்து கொண்டே உலக நிலைமையையும் தேசத்தின் போக்கையும் வினோபாஜி உற்று நோக்கினார். இச்சந்தர்ப்பத்தில் தன் கடமை என்ன என்று சிந்திக்கலானார். இனிமேலும் தான் ஆசிரமத்துக்குள்ளிருப்பது சரியில்லை யெனக்கண்டார். முதல் முதலில், தேசப்பிரிவினை காரணமாக உற்றார் உறவினரையும், சொத்து சுதந் தரங்களையும் பறிகொடுத்துவிட்டு உயிர் தப்பிவந்த அகதிகளுக்கு ஆறுதலளிக்கும்பொருட்டு ஆசிரமத்தைவிட்டு வெளிக்கிளம்பினார். டெல்லிக்குச் சென்று ராஜகட்டத்தில் காந்திஜியின் சமாதியைத் தரிசித் தார். பிறகு சுற்றிலுமுள்ள அகதிகளின் குடியிருப்பு இடங்களுக்குப் போய் அவர்களுக்காக வேலை செய்தார். 1948-ம் ஆண்டு வினோபாஜி சர்வோதய சமாஜத்தை ஸ்தாபித்தார். எல்லோரையும் இன்புறச் செய்தல் அதன் நோக்கமாகும். 18 வயதுக்குக் குறையாத யாரும் அதில் சேரலாம். சந்தா வருடத்துக்கொரு நூல் சிட்டம். அதற்குத் தலைவர், காரியதரிசி என்று நிர்வாகிகள் கிடையாது. வோட்டுக்கு விடுவது, தேர்ந்தெடுப்பது, தீர்மானிப்பது என்றும், சட்டதிட்டங்கள் என்றும் இல்லை. ஆனால் வருடமொரு முறை குறிப்பிட்ட இடத்தில்

சமாஜக்கூட்டம் நடைபெறும். அப்போது ஊழியர்கள் தத்தமது சர்வோதய அனுபவங்களைப் பரிமாறிக்கொள்வார்கள். வினோபாஜி நிலைமைக்குத் தக்கபடி ஊழியர்களுக்குச் சிறந்த வழிகாட்டுவார்.

1949-ம் ஆண்டு தென்னாட்டில் தேசீய நிர்மாண வேலைகள் நடைபெற்றுவரும் வீரபாண்டி, ராமகிருஷ்ண வித்யாலயம், காந்திகிராமம், கல்லுப்பட்டி ஆகிய இடங்களுக்கு விஜயஞ்செய்து ஊழியர்களுக்கு உற்சாகமூட்டினார். கவியரசர் ரவீந்திரநாத தாகூரின் சாந்திநிகேதனத்தில் நடைபெற்ற உலக சமாதான மகாநாட்டின் கடைசிநாள் கூட்டம் சேவா கிராமத்தில் வினோபாஜியின் யோசனையைக் கேட்பதற்கென்றே கூட்டப்பட்டது. ரஷியா தவிர உலகின் எல்லா நாடுகளிலிருந்து சுமார் 50 யுத்த எதிர்ப்புத் தலைவர்களும் 25 காந்தீய ஊழியர்களும் வந்திருந்தனர். வினோபாஜி அவர்களுக்குச் செய்த உபந்நியாசத்தின் சுருக்கம் :

"யுத்தம் போன்ற நாசகாரியங்களில் கலந்துகொள்ளாமை மாத்திரம் அஹிம்சையாகாது. அஹிம்சை, மிகுந்த சக்திவாய்ந்த ஆயுதம். அதுவே ஆக்கும் வல்லமையுள்ள அன்பாகும். சமூக ஏற்றத்தாழ்வு, பசி, பிணி இவற்றைப் போக்கும் சக்தியும் அதற்கு உண்டு. அஹிம்சை ஓர் சிறு கருவியாகவும், மெதுவாய் வேலை செயவதுபோலவும் தோன்றலாம். இந்த யந்திர யுகத்தில் ராட்டை என்ன சாதித்தது என்பதை நீங்கள் அறிவீர்கள். நம்மைச்சுற்றிலுமுள்ள ஏழை மக்களுடன் நம்மை நாம் இன்னும் ஐக்கியப்படுத்திக்கொள்ளவில்லை. நான் கண்டறிந்த மட்டும் பணத்தின் பிடிப்பிலிருந்து நாம் விடுபடாதவரையில் அது சாத்தியமாகாது. சரீர உழைப்பின் மூலமே நாம் உணவு சம்பாதிக்க வேண்டும். இன்றேல் அஹிம்சை ஓர் பெரும் சக்தியாகாது.

"கடவுள்தான் உலக யுத்தங்களை உண்டாக்குகிறார் என்றுகூட நான் சொல்லுவேன். நாம் நேருக்கு நேர் உண்மையை உணராதபோது கருணாமூர்த்தியான கடவுள் மனித இரக்கம் ஏற்படுத்துவதற்காக உலக யுத்தத்தை ஏவுகிறார். அஹிம்சைப் பாதையில் யுத்தம் என்பது நாம் கடக்கவேண்டிய ஓர் பெரிய படியாகும். நமது பார்வையை உள்முகமாகத் திருப்பி மனதைச் சுத்தப்படுத்துவதொன்றே

எல்லாக்குறைகளையும் தீர்க்கும். இல்லா விட்டால் அடிப்படையை விட்டு மேல்படை வைப்பதில் வீணுகக் கவனஞ்செலுத்தியவராவோம். சேவையுடன் நமது வாழ்வு பரிசுத்தமானுல் நாம் கடவுளின் ஒளியைக் காணப்பெறுவோம். கடைசியில் கடவுளால்தான் எதுவும் சாத்திய மாகும். நாம் அவருடைய வெறும் கருவிகளே. அவ்விதக் கருவி களாயிருக்க நம்மிடம் தாழ்மையும் அகம்பாவமின்மையும் வேண்டும்.''

''உலகில் எங்கேயாவது அமைதிக்குப் பங்கம் ஏற்பட்டால் அங்கு சென்று பலாத்காரத்தை உயிரைக்கொடுத்து எதிர்ப்பதன் பொருட்டு ஒரு நிரந்தர சாந்தி சேனை தேவை என்று எண்ணுகிறோம். சாந்தி சேனை, தான் பழக்கப்பட்ட இடத்தில்தான் உபயோகமாயிருக் கும். அப்படியானுல் அந்தச் சேனை எப்படிப்பட்டதாயிருக்கவேண்டும்? தினசரி சரீரத்தால் உழைத்து உணவு உற்பத்தி செய்வதிலும், கஷ்டப் படுவோர்களுக்குச் சேவை செய்வதிலும் இரக்கத்தோடு ஈடுபட்ட ஒரு கூட்டத்தாரே சாந்திசேனையாய் விளங்க முடியும். அத்தகைய சேனை யின் ஆயுதங்கள் சத்தியம், அஹிம்சை, புலனடக்கம் ஆகிய ஆசிரம விரதங்களேயாகும். ஸ்தாபனங்கள், சர்க்கார்கள் ஆகிய வெளிச் சாதனங்களால் அஹிம்சை ஒளி பரப்புவதில்லை. இயேசுகிறிஸ்து ஒருவரே உலகம் பூராவும் ஒளிபரப்பினுர். சர்ச்சுகளால் அல்ல. சர்க்காரால் அல்ல. அதுபோலவே புத்தரும். புத்தரின் கொள்கைகள் பரவியதற்குக் காரணம், அவர் தன் ராஜ்யத்தை ஒரு துரும்பை விட்டெறிந்தது போல் விட்டெறிந்ததேயாகும்.''

''மக்கள் யாவரும் ஒரே குலம் என்று வேதங்கள் கூறுகின்றன. புத்தரும் அதையே உபதேசித்தார். ஒருபோதும் இந்தியா வேறு நாடு களின் மீது படையெடுத்ததில்லை. இந்தியன் ஒருவனுக்குத் தேசீய உணர்ச்சி பெருகுவதைக் காட்டிலும் மனித உணர்ச்சி பெருகுவது இலேசாகும். பிரிட்டிஷ் ஆட்சியில் அவதிப்பட்ட காலத்திலும் மகாகவி ரவீந்திரநாத் தாகூர் சாந்திநிகேதனத்தில் உலக கலாசாலை ஸ்தாபித் தார். எங்கள் தலைவரும் சுதந்தரம் பெறுவதற்குக்கூட ஹிம்சை கூடாதென்று போதித்தார். காந்திஜிக்குப்பின் நாங்கள் எத்திசையை நோக்கிச் செல்லுகிறோம் என்ற கேள்வி எழுகிறது. காந்திஜியின் சிறந்த சகாவான ஜவஹர்லால் நேரு தேசத்தை நடத்திச் செல்லுகிறுர். அவருடைய உள்நாட்டு நிர்வாகத்தில் குறையிருந்தாலும் அவருடைய

வெளிநாட்டுக் கொள்கை உலக சமாதானத்திற்குச் சாதகமாயிருப் பதை நீங்கள் காணலாம்.''

''காந்திஜிக்குப்பின் தேசத்தில் இருள் சூழ்ந்ததாக ஜனங்கள் நினையாமல் இல்லை. அவரைத் தம் ஹிருதய கமலங்களில் பதித்துக் கொண்டவர்கள் இன்னும் அவரை மறந்து விடவில்லை. நாளுக்கு நாள் அஹிம்சையைப்பற்றிச் சிந்தித்து நாங்கள் புதிய அனுபவங்கள் பெறு வோம் என்னும் தைரியம் எங்களிடமிருக்கிறது. ஆகவே இந்தியாவை நம்புங்கள்.''

வினேபாஜியின் மனம் மக்களின் வறுமையைத் தீர்க்கும் வழியைப் பற்றி ஆராய்வதிலே பெரிதும் ஈடுபட்டது. பணத்திற்குப் பதிலாக உழைப்புக்கு மதிப்பு ஏற்படச் செய்வதே வழி என்ற முடிவுக்கு வந்தார். தன் உடைக்குப்போல் உணவுக்கும் தானே நிலத்தில் உழைத் தார். ஆசிரமத்தையும் சுயதேவைப் பூர்த்தியில் ஈடுபடுத்தினர். அங்கு பணப்பழக்கத்தையும் ஒழித்தார். பாரத நாட்டில் மக்கள் உயிர் வாழ்க்கைக்கு அத்தியாவசியமான உணவுக்கும் உடைக்கும்கூடப் பரிதவிக்கும் வெட்கக்கேட்டை ஒழிப்பதை விரதமாகக்கொண்டார். மேற்கண்ட தேவைகளைத் தயாரிப்பதில் யந்திரங்களைத் தவிர்ப்பதன் மூலம் கோடிக்கணக்கான மக்கள் உபதொழில் பெறுவார்கள் என் பதும் இவருடைய நம்பிக்கை.

## 6. கால்நடை யாத்திரை

இவ்வித நோக்கத்தோடு வினேபாஜி ஆசிரமத்தில் பரிசோதனை நடத்திக்கொண்டிருக்கையில் ஹைதராபாத் நகருக்கருகில் சிவராம் பள்ளி என்னும் கிராமத்தில் நடைபெறவிருந்த மூன்ருவது சர்வோதய சம்மேளனத்துக்கு இவர் அழைக்கப்பட்டார். அப்போது இவருடைய உடல்நிலை சரியில்லை. ஆயினும் நாட்டின் நெருக்கடியை அனுசரித்து சிவராம்பள்ளிக்குப் போவது கடமை என்று கருதினர். ஆனல் எப்படிப்போவது ? ரயிலில், மோட்டாரில் போக விரும்பவில்லை. அப்படிப் போவதால ஜனங்களின் நிலைமையைத் தானும், தன் கொள் கைகளை ஜனங்களும் சரியாய் உணர முடியாமல் போகும் என்று கருதி

கால்நடையாகவே சிவராம்பள்ளிக்கு யாத்திரை செல்ல நிச்சயித்தார். அதன்படி 1951-ம் ஆண்டு மார்ச் மாதம் 8உ பௌனார் ஆசிரமத்தை விட்டுப் புறப்பட்டார். பௌனாருக்கும் சிவராம்பள்ளிக்கும் சுமார் 300 மைல் தூரம். தேக அசௌகரியமான நிலைமையில் அவருடைய கால் நடை யாத்திரைக்கு ஆசிரமவாசிகள் கவலைப்பட்டனர். வினோபாஜி அவர்களிடம் கூறியதாவது: "நான் செய்த முடிவை மாற்றச் சொல்லாதீர்கள். ஒரு தடவை பிரதிக்கினை செய்துவிட்ட பின் அதை மாற்றக் கூடாது. மாற்றுவதால் மனம் பலவீனமடையும்."

பௌனாரை விட்டு சேவாகிராமத்திற்கும் வர்தாவிற்கும் சென்று எல்லோரிடமும் விடை பெற்றுக்கொண்டார். அவருடைய பிரிவாற்றுமைக்கு ஊழியர்கள் கண்ணீர் விட்டனர். ஸ்ரீ பஜாஜின் மனைவிக்குப் பதிலளிக்கையில் "நான் சிவராம்பள்ளிக்குப் பிறகு மேலும் ஹைதராபாத்துக்குத் தெற்கே போக நேரிடலாம். நான் எப்போது திரும்பி வருவேன் எனச் சொல்ல முடியாது. இதுவே உங்களைக் கடைசித் தடவையாகப் பார்த்ததாகவு மிருககலாம்" என்றார். தேசப் பாதுகாப்பை முன்னிட்டுப் பின்னால் கடுமையானதொரு முயற்சியில் அவா இறங்கப் போவதற்கான அறிகுறி இங்கே தெரிந்தது.

ஒரு நாளைக்குச் சராசரி பத்து மைல் வீதம் கிராமங்கள் வழியாகவும், ஸ்ரீ ராம லட்சுமணர்களைப்போல் வனங்கள் மலைகள் வழியாகவும் நடந்து சென்றார். தமக்குத்தாமே நூற்றுத் துணி நெய்தல், திருகல்லில் மாவு அரைபபது, நாட்டுச் செக்கில் எண்ணெயாட்டுவது, சுகாதாரம், ஒற்றுமை, எவரையும் ஏய்த்துப் பிழைககாமை, நம்பிக்கையோடு உழைத்தல், தெய்வபக்தி ஆகிய உபதேசங்களைச் செய்தும், ஹரிஜனங்கள், கொலலா், தச்சா், நாவிதர்களை உற்சாகப்படுத்திக்கொண்டும் சென்றார். நம்முடைய குறைகளுக்கெல்லாம ஒரே பரிகாரம் கடவுளை வணங்கித் தொழிலில் மனதைச் செலுத்தி இருகைகளாலும் உழைத்தலே என்றார். உள்ளும் புறமும் சுத்தமாயிருத்தல், சுயதேவைக்கு உழைததல், யாரிடமும் அன்பாயிருத்தல் ஆகிய மூன்றையும வலியுறுததினார். "ஒருவன் உலகிலுள்ள செல்வங்களனைத்தும பெற்றவனாயினும உள்ளத்தில் அன்பில்லாதவனாயிருந்தால் அவன் ஒன்றையும பெற்றவனாகான். அதுபோல் அறிவையும், அதிகாரத்தை

யும் பெற்றவர்கள் அன்பில்லாதவராயிருந்தால் அவரும் ஒன்றையும் பெற்றவராகார்'' என்ருர்.

ஜில்லா போலீஸ் அதிகாரி தனக்குத் தந்த போலீஸ் பாதுகாப்பை வேண்டாம் என்ருர். கம்யூனிஸ்டுகளைப்பற்றிக் குறிப்பிடுகையில், ''அவர்கள் பலாத்காரக் கொள்கையைக் கைவிடாவிட்டால் தங்கள் தத்துவத்தைத் தாமே கொன்றவராவர்'' என்று சொல்லி வந்தார். ஹிந்துக்கள் ஹரிஜனங்களைச் சமத்துவமாய் நடத்தாத வரையில் ஹிந்து முஸ்லிம் வேற்றுமையும் இருந்து வரும் என்று எச்சரித்தார்.

சர்வோதய சம்மேளனத்தில் அவர் பேசியதன் சாராம்சமாவது : ''சுயராஜ்யம் பெற்றதும் காந்திஜியை இழந்தோம். கடவுள் சோதனை இது. நாம் அவரைப் பின்பற்ற விரும்புகிருேம். நாம் அவருடைய கொள்கைப்படி நடவாதிருந்தால் அவரைப் பெற்றிருக்க நமக்கு யோக்கியதையில்லை.

''ரயிலில் மேல் வகுப்பில் பிரயாணஞ் செய்வதில் எனக்குச் சந்தோஷமில்லை. அஹிம்சா லட்சியவாதிக்கு அது பொருந்தாது. மேலும் ரயிலுக்குச் செலவாகும் பணம் எங்கிருந்து வருகிறது? பணத்தை நம்பி வேலை செய்யக்கூடாது. உழைப்பை நம்பி வேலை செய்ய வேண்டும், பெரும் நிதி திரட்டுவதிலும் எனக்கு நம்பிக்கை யில்லை. காந்திஜி செய்துவந்த வேலைகளை அதே அளவுக்கு நாம் செய்துவந்தால் போதாது. அவருடைய கொள்கைகள் வளர்ச்சிபெற வேண்டும். கடவுள் ஒரு மகானைத் தந்தார். அவர் விட்டுச்சென்ற வேலைகளை நாம் தொடர்ந்து நடத்தவேண்டும் அல்லது அம்முயற்சியில் மடிய வேண்டும்.

''சாந்தி சேனை கிராமங்களைச் சுற்றிக்கொண்டே வரவேண்டும். பஞ்சம், பலாத்காரம், நோய் நிகழுங்காலையில் மக்களைப் பாதுகாப்பது சாந்தி சேனையின் கடமையாகும். ஊழியர்களுக்கு அன்பின் சக்தியில் நம்பிக்கையிருந்தால் அவ்வப்போது சாந்தி வேலை செய்யும் முறை தானே அமையும்.

"தோட்டி ஜாதி என்று ஒன்று இருக்கத் தேவையில்லை. எல்லோரும் தோட்டிவேலை செய்யும் பழக்கம் பெறவேண்டும். அப்போது தான் தீண்டாமை அடியுடன் ஒழியும். உணவு உற்பத்திக்கு ஏராளமான உரமும் சேரும். சர்க்காவை தேசம் மறப்பதற்கில்லை. நூற்றுக் கொண்டே பிரார்த்தனை செய்யலாம். செய்கையில் ஏகாக்கிரமாயிருத்தலும் பிரார்த்தனையே. ராட்டையின்றி அஹிம்சையில்லை. மனிதர்களுக்குள் சமத்துவம் மிக அவசியம். ஆனால் அன்பில்லாத சமத்துவத்தால் பகைதான் மிஞ்சும்."

## 7. கடவுள் வழி காட்டினர்.

சர்வோதய சமாஜக் கூட்டம் முடிந்ததும் திறந்த மனதோடு நாட்டின் நன்மைக்கு ஒரு வழி கிடையாதாவென்று 14—4—51ல ஸ்ரீ ராமநவமியன்று காலை வினோபாஜி ஹைதராபாத் ராஜ்யத்துக்குள் பிரயாணமானர். அங்கே தெலிங்கான ஜில்லாவில் பெரும் குழப்பம் நிகழ்ந்துகொண்டிருந்தது. அவர் வர்தாவை விட்டு சிவராம்பள்ளிக்கு புறப்படும்போதே தெலிங்கான பிரதேசத்துக்குப் போக எண்ணித்தான், "நான் எப்போது திரும்பி வருவேன் என்று எனக்கேதெரியாது. இதுவே உங்களைக் கடைசித் தடவையாக நான் பார்த்ததாகவுமிருக்கலாம்" என்று சொல்லியிருக்க வேண்டும்.

தெலுங்கான, வாரங்கல், நல்கொண்டா ஜில்லாக்களில் கம்யூனிஸ்டுகள் நிலச்சுவான்தார்களைக் கொள்ளையடிப்பதும், கொலைசெய்வதும் சர்வசாதாரணமாயிருந்தன. அங்கு அநேக நிலச்சுவான்தார்கள் ஆயிரம், பதினயிரம் ஏக்கர்களுக்கு சொந்தக்காரர்களாயிருந்தனர். பலர் பயந்து ஊரைவிட்டே ஓடிவிட்டனர். போலீஸ் ஸ்டேஷன்களும் அடிக்கடி சூறையாடப்பட்டன. இராக்காலங்களில் கம்யூனிஸ்டுகள் நிலச்சுவான்தார்களைக் கொள்ளையடித்துவிட்டுப் பகலில் மலைகளுக்குள் ஒளிந்துகொள்வார்கள். கிராமங்களில் ஏழைமக்களின் ஆதரவு அவர்களுக்கு இருந்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை. சர்க்கார் பலாத்காரச் செயல்கள் நிகழப் பார்த்துக்கொண்டிருப்பார்களா? போலீஸ் படைகளை ஏவிக்கடுமையான நடவடிக்கைகளால் குழப்பக்காரர்களை

அடக்கிச் சிலரை சுட்டுத்தள்ளினர். இதனல் நிரபராதிகளான பலர் துருப்புகளின் ஹிம்சைக்கும் ஆளானுர்கள். இரவில் கம்யூனிஸ்டுகளின் அட்டகாசமும், பகலில் போலீசாரின் வெறியாட்டமும் தாண்டவ மாடின.

வினேபாஜி ஆசிரமத்திலிருக்கையிலேயே அந்த நடக்கும் துக்க கரமான சம்பவங்கள் அவரை மிகவும் வருத்தின. இதென்ன நிலைமை! இதென்ன சுயராஜ்யம்! இப்படியிருந்தால் தேசம் என்ன கதியாவது? என்று கவலைப்பட்டார். நேரில் நிலைமையை அறிந்து நீதியையும் அமைதியையும் பாதுகாக்கத் தீர்மானித்தார். நவகாளியில் சமூகக் கொலைகள் நிகழ்ந்துகொண்டிருக்கையில் எப்படி காந்திஜி அவற்றைக் கேள்விப்பட்டு சும்மா இருக்கமுடியாமல் தனித்து அப்பிரதேசத்தில் கால் நடையாகச் சென்றுரோ, அப்படியே வினேபாஜியும் பயங்கர மான தெலிங்கானு பிரதேசத்துக்குள் கிராமம் கிராமமாகச் சென்றுர். புறப்படும்போதே சர்க்கார் தனக்கு யாதொரு பந்தோபஸ்தும் தர வேண்டாமென்றும், தான் கம்யூனிஸ்டுகளேக்கண்டுபேசி அவர்களின் மனதை மாற்ற முயலப்போவதாகவும், ஆகவே அவருடன் பேச வருபவர் யாரையும் கைதுசெய்யக் கூடாதென்றும் வினேபாஜி கேட்டுக்கொண்டார். சர்க்காரும் ஒப்புக்கொண்டனர்.

நிலச்சுவான்தார்கள் காலமாறுதலை உணர்ந்து நடக்கவேண்டு மென்றும், பல்லாயிரக்கணக்கான ஏழை மக்கள் பாடுபட நிலமில்லா மலும், உண்ணவும், உடுத்தவும் வகையில்லாமல் பிள்ளேகுட்டிகளுடன் துடித்துக்கொண்டிருக்கும்போது தாங்கள் மட்டும் நூற்றுக் கணக்காக, ஆயிரக் கணக்காக ஏக்கர்களே வைத்துக்கொண்டு சுகபோகமாக வாழ்வது பாவம் என்றும் ஏழை மக்களேத் தம் சகோதரர்களாகப் பாவித்து அவர்களுக்கு உதவிசெய்யக் கடமைப்பட்டிருக்கிறுர்கள் எனவும், தேவைக்கு அதிகமாக வைத்திருப்பது திருடு என்றும் புத்திமதி கூறினர். கம்யூனிஸ்டுகள் எவ்வளவுதான் ஏழை மக்களின் நன்மையைக் கருதுபவர்களாயினும் பலாத்காரச்செயல் செய்வது அதர்மம் மட்டுமல்லாமல், அது யாருக்குமே பயன்படாதென்றும், வீணை உயிர்ச்சேதமும், குழப்பங்களும், ஜனங்களின் வரிப்பணத் திற்குச் செலவுமே ஆகுமென்றும், ஆகவே அவர்கள் பலாத்கார

வழியை விட்டுச் சாந்திவழியைக் கடைப்பிடிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். சர்க்காரும் ஈவிரக்கமின்றி அடக்குமுறைசெய்வது தகாது. மக்களின் கொடிய வறுமையும் பயங்கரமான பொருளாதார ஏற்றத்தாழ்வுமே குழப்பத்திற்குக் காரணம் என்பதை அறிந்து, அதற்குத்தக்க பரிகாரம் தேடுவதே நியாயம் என்றும், மிருகச் செயலுக்கு மிருகச்செயல் பரிகாரமாகாதெனவும் அவர்களுக்கு ஆலோசனை கூறினர். ஆங்காங்கு தங்கிய இடங்களில் சில கம்யூனிஸ்டுகள் அவரிடம் வந்து பேசினர்கள். ஹைதராபாத் ஜெயிலில் கம்யூனிஸ்டுத் தலைவர்களை வினேபாஜி சந்தித்துப் பேசினர். வயது வந்தவர்களுக்கெல்லாம் வாக்குரிமை கிடைத்திருக்கிற நிலைமையில், அவர்கள் ஜனங்களிடம் தம் கம்யூனிசக்கொள்கைகளைப் பிரசாரம் செய்து பெரும்பான்மையோரின் ஆதரவைப் பெறுவதற்குப் பதிலாக மேலும் பலாத்கார முறைகளைக் கையாளுவது நியாயமா, அது அவசியம்தானு என்று கேட்டார், அவர்கள் யோசித்துச் சொல்வதாகச் சொன்னர்கள். அவர்களின் கட்சிக் கட்டுப்பாடு அதற்குக் காரணம் போலும்!

18—4—51ல நல்கொண்டா ஜில்லாவில் போச்சம்பள்ளி என்னும் கிராமதத்திற்கு வினேபாஜி வந்து சேர்ந்தார். அதன் ஜனத்தொகை 3000. அதில் 3ல் 2 பங்கு பேர்களுக்கு நிலம் கிடையாது. முதலில் அவர் ஒரு சேரி வழியாக அக்கிராமத்திற்குள் நுழைந்தார். ஒவ்வொரு குடிசைக்குள் சென்று ஹரிஜனங்களின் வாழ்க்கை எவ்விதமிருக்கிறதென்று பார்த்தார். ஒரு குடிசைக்குள் ஒரு ஸ்திரீயும், பிறந்து நான்கு நாளாயிருந்த ஓர் குழந்தையும் படுத்திருந்தனர். குழந்தையை மடியில் எடுத்துக்கொண்டு வினேபாஜி உட்கார்ந்தார். தாய் பார்த்தாள், யாரோ மகான் என்று அறிந்தாள். தான் பெற்ற பிள்ளை என்ன புண்ணியம் செய்ததோ எனச் சொல்லி வினேபாஜியை வணங்கினுள். குழந்தையை வினேபாஜி ஆசீர்வதித்தார். இதற்குள் குடிசை வாசலில் ஹரிஜனங்கள் பலர் கூடிவிட்டனர். வினேபாஜி வெளியே வந்தார். அவர்களின் க்ஷேமலாபத்தை விசாரித்தார், தங்கள் பிள்ளைகள் படிப்பதற்கு ஒரு பள்ளிக்கூடம் கட்டித்தர வேண்டுமென்று கேட்டனர். அவர்களில் சிலர், எங்களுக்கு சர்க்காரிடம் கொஞ்சம் நிலம் வாங்கித் தாருங்கள்; நாங்கள் விவசாயம் செய்து பிழைத்துக் கொள்கிறோம்

என்றனர். வினேபாஜிக்கு அது நியாயமாய்த் தெரிந்தது. எவ்வளவு நிலம் வேண்டுமென்று கேட்டார். எண்பது ஏக்கர் என்று பதில் வந்தது. "சரி, சர்க்காருக்கு ஒரு மகஜர் எழுதித்தாருங்கள். அதை நான் அவர்களுக்கு அனுப்பி நிலம் தரும்படி சிபார்சு செய்கிறேன்" என்றார் வினேபாஜி. அப்படியே விண்ணப்பம் ஒன்று எழுதி அவரிடம் கொடுக்கப்பட்டது.

மாலையில் பொதுக்கூட்டம் நடந்தது. அதில் ஹரிஜனங்கள் நிலம் கேட்டதைப் பிரஸ்தாபித்து, அங்கு வந்திருப்பவர்களில் யாராவது அந்த ஏழைகளுக்கு நிலம் தரக்கூடாதா என்று பரிவோடு கேட்டார். உடனே ஒருவர் எழுந்தார். நான் நூறு ஏக்கர் தருகிறேன்'' என்றார். அவருடைய பெயர் ஸ்ரீ ராமச்சந்திர ரெட்டி. அவர் சொன்னபடி உடனே எழுதிக்கொடுத்தார். வினேபாஜி ஆச்சரியப்பட்டார். ஒரு சொல் சொல்லிக் கேட்டதற்கு இந்தப் பலனுனல் நிலச்சுவான்தார்களைப் பயமுறுத்தியோ, கொலைசெய்தோ ஏழைகளுக்கு நிலம் வாங்கித் தரத்தேவையில்லை. அவர்களை அன்புடன் கேட்டால் கொடுப்பார்கள் என்று வினேபாஜிக்குத் தெரிந்தது. இதன் மூலம் கடவுள் தனக்கு நல்லதொரு வழிகாட்டியதாக வினேபாஜி நம்பினர். இதே வழியைக் கடைப் பிடித்து ஏழை பணக்காரர் வேற்றுமைக்கு இடமில்லாமல் நிலப்பிரச்னையைத் தீர்த்துவிட உறுதிகொண்டார். அடுத்த நாள் தங்கிய கிராமத்திலும் இரு சகோதரர்கள் சுமார் நூறு ஏக்கர் கொடுத்தனர். அதுமுதல் பூமிதான இயக்கம் ஆரம்பமாயிற்று. போகிற வழியெல்லாம் வினேபாஜி நிலம் கேட்கலானர். உலகில் எங்கும் நிலப்பிரிவினை ஒரே விதமாயிருப்பதால் பூமிதான இயக்கம் உலக இயக்கமாகி, இந்திய சரித்திரத்தில் மட்டுமல்லாமல் உலக சரித்திரத்திலும் போச்சம்பள்ளியும், ஸ்ரீ ராமச்சந்திர ரெட்டியும் பொன்னெழுத்தில் குறிப்பிடப்படுவது நிச்சயம்.

உலகத்தில் புது யுகம் பிறந்தது. மனித உள்ளத்தின் ஆழத்தில் ஓடிக்கொண்டிருக்கும் அன்பு ஊற்று, வினேபாஜியின் வேண்டுகோள் பட்ட மாத்திரத்தில் ஆருக ஓட ஆரம்பித்துவிட்டது தெய்வச்செயலேயாகும்.

போகிற இடங்களில் எல்லாம், மனித வாழ்க்கையைப் பற்றிய பல உண்மைகளையும் நீதிகளையும் கூறிக்கொண்டே விநோபாஜி யாத்திரை செய்தார். ஜனங்கள் இவரை உற்சாகமாய் வரவேற்று நிலதானம் செய்தனர். ஒரு ஊரில் ஒரு தனவந்தர் 500 ஏக்கர் வைத்திருந்தார். எனக்கு ஐந்து குமாரர்கள் இருக்கிறார்கள். அவ்வைந்து பேருக்கும் இருபது குழந்தைகள். ஆகவே ஆள் ஒன்றுக்கு இருபத்தி ஐந்து ஏக்கர்தான் வருகிறது என்று நிலதானம் செய்யத் தயங்கினர். விநோபாஜி அவருடைய ஆசையைக் கண்டித்தார், மனிதன் ஆசையை அடக்காமல் வளர விட்டுக்கொண்டேபோனால் அவனுக்குத் துன்பந் தான் என்றும் அவன் செத்தாலும் அவன் ஆசை அடங்காதென்றும், அவனுடைய ஆத்மா சாந்தி யடையாமல் வீட்டையே சுற்றிக்கொண்டிருக்குமென்றும் எடுத்துக் கூறினர். கிருஷ்ணன் யமுனை நதிக்கரையில் யாதவச் சிறுவர்களுடன் விளையாடி மகிழ்ந்ததுபோல் ஒருநாள் கிராமக் குழந்தைகளுடன் குழந்தையாக இவர் விளையாடி மகிழ்ந்தார். எல்லாம் சிரிப்பும் வேடிக்கையாகவுமிருந்தது. ஒவ்வொரு கிராமமும் கோகுலமாக விளங்கவேண்டுமென்பது இவருடைய நோக்கம். பாலோ, வெண்ணெயோ, தேனோ, அரிசி, பருப்போ எதுவானாலும் அவற்றைக் கோகுலவாசிகளைப்போல் பகிர்ந்து சாப்பிடவேண்டும் என்பார். நிலதானம் செய்பவர் தன் மகளைக் கல்யாணம் செய்துகொடுக்கும் போது ஆடை ஆபரணங்கள், பண்டபாத்திரங்களைத் தானம் கொடுப்பதுபோல் நிலத்தை சந்தோஷமாய்த் தானம் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்வார்.

இவ்விதமாகப் பிரசாரம் செய்து மொத்தம் 12,000 ஏக்கர் தானம் பெற்றார். நிலமில்லாத விவசாயத் தொழிலாளர்களுக்கு அந் நிலங்களை வினியோகிப்பதற்காகத் தகுந்த அறிவும், திறமையும், நேர்மையுமுள்ள சிலரை நியமித்துவிட்டு மழைகாலம் வரவும் பௌனாருக்குத் திரும்பினர்.

பிறகு பௌனாரைச் சுற்றிச் சுயதேவைப் பூர்த்தி இயக்கத்தைத் தீவிரப்படுத்தும் முயற்சியில் தன் கவனத்தைத் திருப்பினர். நான்கு மாதங்கள் சலிப்பில்லாமல் உழைத்தார். ஒரு நாள் இந்தியப் பிரதம

மந்திரி ஜவஹர்லால் நேருவிடமிருந்து ஐந்துவருடத் திட்டத்தைப்பற்றி யோசனை சொல்ல டெல்லி வருமாறு கடிதம் வந்தது. 12—9—51ல டெல்லிக்குக் கால்நடையாகவே புறப்பட்டார். வழக்கம்போல் நில தானம் வாங்கிக்கொண்டு யாத்திரை செய்தார். வார்தாவிலிருந்து டெல்லி 850 மைல். முதலில் மத்தியப் பிரதேசம், அடுத்தபடி விந்தியப் பிரதேசம் வழியாகச் சென்றார். நாளொன்றுக்கு சராசரி 300 ஏக்கர் நிலம் கிடைத்தது. தெலிங்கானுவில் கம்யூனிஸ்டுகளுக்குப் பயந்து நிலச்சுவான்தார்கள் கொடுத்ததுபோல் மற்ற பிரதேசங்களில் நிலம் கொடுக்கமாட்டார்கள் என்பது அநேகருடைய அபிப்பிராயம். ஆனால் அதற்கு மாருக நிலம் கொஞ்சம் வைத்திருப்பர்கள் அதிகம் வைத்திருப்பவர்கள் என்ற வித்தியாசமில்லாமல் பலர் தானம் செய்தனர். தானப் பத்திரங்கள் நேரிலும் தபாலிலும் வந்து குவிந்த வண்ணமாயிருந்தன. கூட்டங்களில் பத்திரங்களை வாங்கிமுடியவில்லை. பல ஊர்களில் தானப்பத்திரங்களை மாலையாகக் கோர்த்து வினேபாஜிக்கு அளித்தனர். ஜனங்களின் உற்சாகத்துக்கோ அளவில்லை. நிலம் சேர்த்து வைப்பதில் சந்தோஷப்பட்ட மக்கள் இப்போது நிலத்தைத் தானம் செய்வதற்குச் சந்தோஷப்படும் காரணம் என்ன? பூமிதான யக்ஞத்தின் உன்னதமான பரிசுத்த நோக்கமும், வினேபாஜியின் தபோபலமுமே அதற்குக் காரணங்களாகும். டெல்லி யாத்திரையில் மொத்தம் 18,000 ஏக்கர் நிலம் கிடைத்தது.

1951-ம் டிசம்பர் மாத மத்தியில் வினேபாஜி டெல்லி சேர்ந்தார். நேரே டெல்லிக்குள் சர்க்கார் மாளிகைக்குப் போகவில்லை; யமுனு நதிக்கரையில் ராஜகட்டத்திலுள்ள தேசப்பிதாவின் சமாதிக்கருகில் இவருக்கென்று அமைக்கப்பட்ட குடிசையில் தங்கினர். ஜனதிபதி ராஜன் பாபுவும், இந்தியப் பிரதம மந்திரி ஜவஹர்லால் நேருவும் தனித்தனியே வந்து மகரிஷியைக் கண்டுபேசினர். பெரும் பெரும் நிபுணர்களான ஐந்து வருடத் திட்டக் கமிஷனர்களும் இவருடன் தினம் மூன்று மணிநேரம் வீதம் மூன்று நாட்கள் ஆலோசனை நடத்தினர். வினேபாஜி அவர்களிடம் கூறியதன் சாராம்சமாவது:

"1952-ம் ஆண்டுக்கு மேல் வெளி நாடுகளிலிருந்து உணவு இறக்குமதி செய்வதில்லையென்று ஜவஹர்லால் நேருஜி தான் கொடுத்

திருந்த வாக்குறுதியிலிருந்து பின்வாங்கியது வருந்தத்தக்கது. உணவு சுயதேவைப் பூர்த்திக்குத் திட்டத்தில் முதலிடம் அளிக்கவேண்டும். பத்துப்பேர்கள் இருக்கும் குடும்பத்தில் எட்டுப்பேர்களுக்கு மட்டும் வேலையும் உணவும் கிடைக்க வழி செய்தால் போதாது. அப்பத்துப் பேர்களுக்கும், அதாவது நாட்டிலுள்ள அனைவருக்கும் வேலையும், உணவும் கிடைக்க வழிசெய்யாத எந்தத் திட்டமும் தேசீயத் திட்டமாகாது. உழைக்கும் சாதனங்களும், உற்பத்தியில் சரியான பங்கும் எல்லோருக்கும் கிடைக்க வேண்டும். ஒரு அங்கத்தினர் ஐந்துவருடத் திட்டம் ஓரளவு உணவு சுயதேவைக்குத்தான் தயாரிக்கப்படுகிறது என்றார். அப்படியானால் அந்த ஓரளவும் ஏழைகளை முன்னிட்டே செய்யப்படவேண்டும்'' என்றார் வினோபா பாவே.

''இரண்டாவதாகத் திட்டக் கமிஷனர்கள் கிராமவாசிகளின் நலத்தை ஞாபகத்தில் கொள்ளவேண்டும். கிராமங்களின் விளையும் மூலப்பொருள்கள் கிராமங்களிலேயே கைத்தொழில் பண்டங்களாக மாற்றப்படவேண்டும். இதுவே சுயதேவைப் பூர்த்தியாகும். கிராம வாசிகளுக்கு எப்படியாவது தொழில் கொடுக்க வேண்டும். யந்திரங்களால் அது சாத்தியமாகாது. உணவு, உடை இரண்டின் உற்பத்தியில் கிராமத் தொழில்களுக்கும் கிராமக்கருவிகளுக்கும் உரிய இடம் அளிக்கப்படவேண்டும்'' என்றார்.

பண்டைக் காலத்தில் ராஜாக்கள் முனிவர்களிடம்போய் போசனைகள் கேட்பதும் ஆசி பெறுவதும் உண்டு. இக்கலியுகத்தில் முற்றும் துறந்த முனிவர் இருந்த குடிசைக்கு தேசத்தை ஆளும் ஜனாதிபதியும் அவருடைய மந்திரி பிரதானிகளும் வந்து யோசனை கேட்பது ஓர் அதிசய மட்டுமல்ல, புதுயுகம் பிறந்ததற்குச் சிறந்த அறிகுறியாகும். ஏன்? உலக வல்லரசுகளும் அவரிடம் யோசனைகேட்டு நடக்கும் நாளும் வராமல் போகாது!

**புதுகாந்தி 1951-ம் வருஷம் டிசம்பர்மீ 24உ டெல்லியைவிட்டு உத்திரபிரதேசயாத்திரையை ஆரம்பித்தார். நாடு குடியரசு பெற்ற பிறகு, முதல் பொதுத் தேர்தல் சமயமாயிருந்தது அது. பல்வேறு கட்சிகளிடையே பெரும் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தது.**

மக்களின் கவனம் அதில் ஈடுபட்டிருந்தாலும், பாபு ராகவதாஸ் என்னும் உத்தமமான தலைவரின் கீழ் நூற்றுக்கணக்கான தன்னலமற்ற ஊழியர்கள் மிக உற்சாகமாய் ஓடி ஓடி நிலம் சேர்த்தனர். நாளொன்றுக்குச் சராசரி ஆயிரம் ஏக்கர் கிடைத்தது. காசி மகாராஜா பதினாயிரம் ஏக்கர் பூமி கொடுத்தார். அப்பிரதேச முதல் மந்திரி ஸ்ரீ கோவிந்த வல்லப பந்த் பூமிதான யக்ஞத்திற்குப் பகிரங்கமாகப் பூரண ஆதரவளித்தார். ரெவினியூ அதிகாரிகள் விநோபாஜியுடன் யாத்திரை செய்து நிலதானம் செய்பவர்களின் பெயர், விலாசம், நிலத்தின் அளவு, நம்பர் முதலியவைகளைச் சாட்சிகள் என்ற முறையில் குறித்துக்கொண்டனர். ஒரு கலெக்டர் (Court of wards) ஜமீன் மைனர்களிடமிருந்து பதினாயிரம் ஏக்கர் சேர்த்துக்கொடுத்தார்.

## 8. மங்கராத் கிராமத்தில் மற்றோர் அதிசயம்.

போச்சம்பள்ளியில் போல் உத்தரப்பிரதேச யாத்திரையிலும் ஓர் அற்புதம் நடந்தது. யாத்திரை மார்க்கத்திலிருந்து இரண்டுமைல் தூரத்தில் மங்கராத் என்னும் கிராமம் உள்ளது. திவான் ஸ்ரீ சத்ருக்ன சின்ஹா என்னும் சிறந்த ஊழியர் தலைமையில் அவ்வூர்வாசிகள் விநோபாஜி தங்கியிருந்த கிராமத்திற்கு வந்து 101 ஏக்கர் தானம் செய்தனர். மாலை பொதுக்கூட்டத்தில் விநோபாஜியின் பிரசங்கத்தைப் பிரியத்தோடு கேட்டனர். அந்தந்தக் கிராமத்திலுள்ள நிலம் பூராவும் அந்தந்தக் கிராமவாசிகளுக்கே அதாவது நிலமுள்ளவர்கள், இல்லாதவர்கள் எல்லோருக்குமே பொதுச் சொந்தமாகிவிடவேண்டும்; கடவுளின் நிலத்தைத் தனிச்சொந்தம் பாராட்ட யாருக்கும் உரிமை இல்லை என்ற உயரிய லட்சியம் அவர்களின் மனதில் பதிந்தது. தங்கள் கிராமத்தில் அதை அமுலுக்கு கொண்டுவர வேண்டுமென்ற ஆசை யுடையவர்களாய், தங்கள் ஊருக்கு இரவே திரும்பி நடுநிசியில் கிராமவாசிகளனைவரையும் கூட்டிவைத்து விநோபாஜியின் உபதேசத்தையும், தங்களின் விருப்பத்தையும் எடுத்துரைத்தனர். நீண்டநேரம் அதன் சாதக பாதகங்களை ஆராய்ந்தபின் அங்குள்ள மொத்தம் நிலச் சுவான்தார்கள் 66 பேர்களும் தங்களுக்கு சொந்தமான 1300 ஏக்கர் நிலங்களை, நிலமில்லாத 50 குடும்பங்களுக்கும் சேர்த்து கிராமத்திற்குத் தானம் செய்யச் சம்மதித்தனர். உடனே அவ்விதமே ஒரு கூட்டுத்

தானப்பத்திரம் எழுதி மறுநாள் காலை விநோபாஜியிடம் கொடுக்கப் பட்டது. முன்பின் வெளியுலகத்துக்குத் தெரியாத மங்கராத் கிராமம் இந்தியா முழுமைக்கும் ஒரு முன்மாதிரியாக ஆயிற்று. விநோபாஜி அக்கிராமவாசிகளைப் பெரிதும் பாராட்டினார். எல்லாக் கிராமங்களும் அதனைப் பின்பற்றுமாறு அடிக்கடி கேட்டுக்கொள்கிறார். அக்கிராமத் தார் அனைவரும் கூட்டுறவு முறையில் பாடுபடவும் அதன் பலன்களை அனுபவிக்கவும் தகுந்ததொரு திட்டத்தை வகுத்து நல்ல ஊழியர் ஒருவரையும் அதற்காக நியமித்திருக்கிறார்.

மங்கராத்தில் கின்னரர்கள், கந்தர்வர்கள் வசிக்கவில்லை. எல்லா ஊர்களிலும்போல் சாதாரண மனிதர்களே அங்கு வசிக்கின்றனர். அவர்களுக்கு சாத்தியமானது மற்றவர்களுககு முன் பின் சாத்திய மாகத்தான் செய்யும். யாவும் தகுந்த ஊழியர்கள் தகுந்த முறையில் செல்வந்தர்களை அணுகுவதைப் பொறுத்திருக்கிறது.

உத்தரப்பிரதேசத்தில் யாத்திரை முழுதும் உணர்ச்சி மயமாயிருந்த தாகக் கூறலாம். ராமாயணம் இயற்றிய வால்மீகி முனிவரும், துளசி தாசரும் பிறந்த அப்பிரதேசத்தில் எங்கும் ராமகானமே கேட்டு விநோ பாஜி பரவசமானார். இவர் இடையிடையேயே பல இடங்களில் கங்கா நதியைக் கடந்த காட்சி. ராமன் கங்கையைக் கடந்த காட்சிக்கு ஒப்பாயிருந்தது.

காங்கிரஸ்வாதிகள், சோஷலிஸ்டுகள், ரா. சு. சேவக சங்கத்தார், ஹிந்துமகா சபையினர், லீகர்கள் தத்தம் கொடிகளுடன் விநோபாஜியின் வரவேற்பில் கலந்துகொண்டனர். நிலதானமும் செய்தனர். பூமிதான யக்ஞம் தேசத்தை ஒற்றுமைப்படுத்தும் தன்மையுள்ளது என்பதை இதிலிருந்து அறியலாம். உத்தரப்பிரதேச யாத்திரையில் மொத்தம் மூன்று லட்சம் ஏக்கருக்குமேல் நிலம் கிடைத்தது.

நிற்க, மழைகாலம் வந்தது. காசியில் சிலகாலம் தங்கியிருந்தார். அங்கு ஓய்வு ஒழிவில்லாமல் பல கூட்டங்களில் பேசினார். தர்மத்தைப் பலவாறு உபதேசித்தார். அதுசமயம் அவருடைய 58-வது ஜன்ம தினம் வந்தது. காசிவாசிகள் அப்புண்ணிய தினத்தைப் பக்தியுடன்

கொண்டாடினார்கள். அந்தணர் பலர் அவர் தீர்காயுளோடிருக்க ஆசீர்வதித்தனர். வினோபாஜி அந்நாளைப் பெரிதும் ஆத்ம சோதனையில் கழித்தவண்ணமாயிருந்தார். தன்னை இன்னும் எந்த விதத்தில் உலகினுக்கு அர்ப்பணம் செய்யலாம் என்று சிந்தித்தார். மாலையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அப்பொழுது பேசுகையில், தன்னை மேலும் கடவுளுக்கு அர்ப்பணித்துக்கொள்ள விரும்புவதாக உறுதியான வார்த்தைகளில் கூறினார். ஜனங்கள் எல்லோரும், "என்ன சொல் வாரோ! உண்ணாவிரதம்பற்றி எதுவும் சொல்லிவிடுவாரோ" என்று கவலையுடன் அவருடைய பேச்சை எதிர்பார்த்தனர். "நாள் முழுதும் யோசித்ததில், எனக்கு உலகில் அதிகப்பற்று எதில் இருக்கிறதோ அதைத் துறந்து விடுமாறு என் அந்தராத்மா கூறிற்று. 30 ஆண்டு களாக எந்த ஆசிரமத்தில் தவத்திலும், உழைப்பிலும், ஆராய்ச்சியிலும் காலம் கழித்தேனோ, எங்கு பல ஆண்டுகள் வாழ்ந்துவந்தேனோ அந்த பௌனார் பரந்தாம் ஆசிரமத்திற்கு நிலப் பிரச்னை தீரும்வரையில் திரும்பிப்போவதில்லை என்னும் பிரதிக்ஞையை எடுத்துக்கொண்டிருக் கிறேன்" என்று வெளியிட்டார். சுயராஜ்யம் பெறும்வரை, தான் சபர் மதி ஆசிரமம் திரும்புவதில்லை என்று 1933-ம் ஆண்டு காந்தியடிகள் சபதம் செய்ததை இது ஞாபக மூட்டுகிறது! காந்திஜியின் ஊக்கம் காந்திஜியோடு போகவில்லை.

அடுத்தபடியாக வினோபாஜியின் பீகார் யாத்திரை 1952 செப்டம்பர் மத்தியில் ஆரம்பமாயிற்று. நாளுக்கு நாள் பூமிதான யக்ஞத்தின் லட்சியமும் வளர்ந்துகொண்டே போகிறது. தெலிங்கானா யாத்திரையில் நிலமுடையவர்களைத் தங்கள் நிலத்தில் 5ல் ஒரு பங்கு, 6ல் ஒரு பங்கு என்று பங்கு போட்டுக்கொடுக்கும்படி கேட்டார். 5 வருஷங்களில் 5 கோடி ஏக்கர் வேண்டுமென்றார். டெல்லி, உத்தரப் பிரதேச யாத்திரைகளில் நிலம் முழுவதும் அந்தந்த கிராமத்துக்குப் பொதுச் சொத்தாவதுதான் பூமிதான யக்ஞத்தின் இறுதி லட்சியம் என்றார். இப்போது பூமி மாத்திரமல்ல, பணமும் இதர சம்பத்துக் களும் தானம் செய்யப்படவேண்டும் என்று கேட்கிறார். அதற்குத் தக்கபடி இவருடைய சொற்களும் அருள்மிகுந்திருக்கின்றன. நிலச் சுவான்தார்களைப் பார்த்து "கடவுளின் பூரண அருள்பெற்றவன்

உங்களிடம் நிலம் கேட்கிறுன் என நம்புங்கள். நான் உங்கள் ரட்சகன்; உங்களேக் காப்பாற்ற வந்திருக்கிறேன்'' என்று சொல்லு கிறுர். இவ்வார்த்தைகளேக் கேட்கும்போது இயேசுநாதரின் ஞாபகம் வருகிறது. புத்தர் பெருமான் தோன்றிய பீகார் மாகாணத்தில் இவர் புத்தரைப்போலும் விளங்குகிறுர்.

நாளொன்றுக்குப் பதினேந்து மைல், சில சமயங்களில் பதினெட்டு மைல் நடக்கிறவருக்கு மூன்று மணிக் கொருதரம் பாலோ, தயிரோ போதுமா? உடம்பு நாளுக்கு நாள் மெலிந்தது. நண்பர்கள் டாக்டர் களேக் கொண்டு இவரைச் சோதித்தனர். இவர் ஆகாரம் அதிகம் சாப்பிடவேண்டுமென்று டாக்டர்கள் யோசனே கூறினர். அது முதல் பழங்கள் சாப்பிடுவதை அதிகரித்தார். ''நீங்கள் இவ்வளவு சொற்ப ஆகாரம் சாப்பிடுகிறீர்களே, உங்களின் கடுமையான உழைப்புக்கு அது போதுமா?'' என்று கேட்டதற்கு ''சூரிய ஒளியும், காற்றும் எனக்கு உணவோடு உணவாய் இருக்கின்றன'' என்று பதிலளித்தார்.

பீகாரின் மலேப்பிரதேச யாத்திரை இவருடைய உடலேப் பெரிதும் பாதித்தது. இவருக்கு ஜுரம் உண்டாயிற்று. டாக்டர்கள் பரிசோ தித்துப் பார்த்ததில் ஒருவித கொடிய மலேரியா ஜுரமும், இரத்த அமுக்கமும் இருப்பதாகக் கண்டுபிடித்தனர். ஜுரம் 105 டிகிரிக்கு வந்தது. பிரயாணத்தை நிறுத்தி சாந்தில் என்னுமிடத்தில் தங்கினுர். இவர் நோய்வாய்ப்பட்ட செய்தி ஜனதிபதிக்கும், இந்தியப் பிரதம மந்திரிக்கும் எட்டி இவருக்குத் தக்கபடி சிகிச்சை செய்யும்படி மாகாண சர்க்காருக்கு உத்தரவிட்டனர். எல்லா மந்திரிகளும் பெரிய டாகடர்களும் வந்து இவரைக் கவனித்தனர். இவர் கட்டாயம் மருந்து சாப்பிடவேண்டுமென்று வற்புறுத்தினர். நோய் கண்டால் மருந்து சாப்பிடாமலிருந்து சொஸ்தமடையும் பழக்கத்தில் இருந்தவராதலால் மருந்து சாப்பிட மறுத்தார். ஜுரம் தணிந்தபாடில்லே. ஆனுல் இவருடைய உற்சாகமும் குறையவில்லே. நம்முடைய கவலேயோ அதிகரித்தது. ''கடவுளே! எங்கள் தலேவரைக் காப் பாற்று'' என்று பிரார்த்தித்தோம். இவரையும் மருந்து சாப்பிடும்படி கெஞ்சினேம். பீகார் முதன் மந்திரி ஸ்ரீ கிருஷ்ண சின்ஹா இவரிடம்

வந்து, "என் நிலமனைத்தும் தானமாகத் தருகிறேன். அத்துடன் தாங்கள் மேற்கொண்ட வேலையையும் தாங்கள் குணமடையும் வரையில் செய்கிறேன். தாங்கள் தயவுசெய்து மருந்து சாப்பிடுங்கள்" என்று கெஞ்சினர். "பூமிதானம் நான் சேர்க்கிறேன்" என்ற சொல் இவருடைய பிடிவாதத்தை தளர்த்திற்று போலும்! மருந்து சாப்பிடச் சம்மதித்தார். மேலும் எந்த மக்களின் நன்மைக்காக உழைக்கிருரோ அந்த மக்கள் ஏகோபித்துச் செய்யும் வேண்டுகோள் கடவுளின் விருப்பம், அதற்கு இணங்குவது அஹிம்சாவாதியின் கடமை என்று விநோபாஜி உணர்ந்தார் என்று தெரிகிறது. இவரைக் காப்பாற்றிய கடவுள் உலகத்தையும் காப்பாற்றினர். மருந்து சாப்பிடவும் விநோபாஜியின் ஜுரம் தணிந்தது. இரண்டு நாளில் முற்றிலும் விட்டது. உடல் நாளுக்கு நாள் தேறிவந்தது. உலக நன்மையில் அக்கரையுள்ள யாவரும் இப்பெருமானுக்கு நீண்ட ஆயுளும் பூரண தேக ஆரோக்கியமும் அளிக்குமாறு தினமும் பிரார்த்தனை செய்யக் கடமைப்பட்டிருக்கிருர்கள்.

தற்சமயம் விநோபாஜி பீகார் மாகாணத்திலேயே சுற்றிக்கொண்டு வருகிருர். பீகார் ஊழியர்கள் நான்கு லட்சம் ஏக்கர் சேர்த்துத் தருவதாக வாக்களித்ததன் மேல்தான் இவர் அங்குச் சென்ருர். ராம்கார் ராஜா முதலில் ஒரு லட்சம் ஏக்கர் கொடுத்தார். அவரைப் பின்பற்றி வேறு இரு ராஜாக்கள் ஆளுக்கு ஒவ்வொரு லட்சம் ஏக்கர் கொடுத்தனர். இப்போது அங்கு சுமார் 12 லட்சம் ஏக்கர் சேர்ந்து விட்டது. பீகாரின் 5 வருஷக் கோட்டாவாகிய 32 லட்சம் ஏக்கரையும் வசூலித்து விட்டுத்தான் அடுத்த மாகாணத்திற்குச் செல்லுவதென்று இப்போது மற்ருெரு சங்கல்பம் செய்துகொண்டுவிட்டார். இதனல் இதர மாகாணங்களுக்கு ஊக்கம் அதிகமாகும் என்பது இவருடைய அபிப்பிராயம்.

## 9. தீண்டாமைக்கு அடி விழுந்தது,

கடவுள் தன் விருப்பத்தை இன்ன வழியில்தான் நிறைவேற்றுவார் என்று சொல்லுவதற்கில்லையல்லவா! இதற்கு உதாரணமாக பீகார் மாகாணத்தில் தேவ்கார் என்ற ஊரில் 19—9—53ல மாலை

ஓர் சம்பவம் நடந்தது. ஒரு சமயம் அங்குள்ள ஸ்ரீ வைத்தியநாதர் ஆலயத்துக்குள் மகாத்மா காந்தி ஹரிஜனங்களை அழைத்துச்செல்ல முயற்சித்துத் தோல்வியுற்றார் என்று சொல்லப்படுகிறது. யாத்திரா மார்க்கத்தில் வினோபாஜி அவ்வூர் சென்றவுடன், ஹரிஜனங்களை அக் கோவிலில் அனுமதிக்கும் பிரச்னை கிளம்பியது. கோவில் பண்டாக்கள் (பூசாரிகள்) ஹரிஜனங்களை மனமுவந்து வரவேற்கத் தயாராயிருந்தால் மட்டும்தான் அவர்களுடன் கோவிலுக்குச் செல்லலாமென வினோபாஜி தெரிவித்தார். தலைமைப் பண்டா தான் ஹரிஜனங்கள் ஆலயத்துக்குள் வருவதை வரவேற்பதாக வினோபாஜிக்கு எழுதினார். அதன்மேல் வினோபாஜி தன் கோஷ்டியாருடன் பஜனைசெய்துகொண்டு பக்தி பூர்வமாகக் கோவிலுக்குப் புறப்பட்டார். ஆனால் கோவில் வாசலை அணுகவும் பண்டாக்களில் பலர் அதை எதிர்ப்பதாகத் தெரிந்ததும் வந்த வழியே திரும்பினார். புத்தியில்லாத அப் பண்டாக்கள் யாரை என்ன செய்கிறோமென்று தெரியாதவர்களாய் வெறி பிடித்தவர்களைப்போல் திரும்பிப் போய்க்கொண்டிருந்தவர்களை தடிகளால் தாக்கினர். தம் குருநாதன்மேல் அடிவிழாதபடி சீடர்கள் தடுத்துப் பார்த்தும் முடியவில்லை. தீண்டுதற்கரிய திருமேனியிலும் அடிகள் விழுந்தது. ஒரு அடி இவர் கழுத்தில் விழுந்தது. பரிபூரண அஹிம்சாவாதியான இவர் சிறிதும் வருத்தப்படவில்லை. இதுவும் கடவுளின் கருணையே என நினைத்து இருப்பிடம் சேர்ந்தார். ''உங்களை அடிக்கும்போது உங்களில் யாருக்காவது அடித்தவர்மீது கோபம் உண்டாயிற்று'' என்று விசாரித்தார். எல்லோரும் இல்லையென்றனர். வினோபாஜிக்கு உண்டான திருப்தி சொல்லிமுடியாது.

6ஓ13 V2:51y7

பண்டாக்களின் மடத்தனம் யாவராலும் கண்டிக்கப்பட்டது. வினோபாஜியின்மேல் விழுந்த அடி தீண்டாமை என்னும் கொடிய வழக்கத்தின்மேல் விழுந்த அடியாயிற்று. அதுமுதல் ஹரிஜனங்கள் ஆலயம் செல்வதை யாரும் தடுப்பாரில்லை. சர்க்கார் தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தை பலமாய் அமுல்செய்ய ஆரம்பித்துவிட்டனர். வந்திக்குக் கூலியாளாக வந்த சிவபெருமானைப் பாண்டியன் அடித்த அடி அண்டசராசரத்தையும் அடித்த கதையும், இதுவும் ஒன்று என்று

கூறலாம். பொருளாதார ஏற்றத்தாழ்வு ஒழிப்புடன் சமூக ஏற்றத் தாழ்வும் ஒழிகிறது.

## 10. பீஹாரில் அவரது மகத்தான சாதனை

1953 மார்ச்சு 7-ம் தேதி சாண்டில் என்னுமிடத்தில் ஐந்தாவது அகில இந்திய சர்வோதய சம்மேளனம் நடைபெற்றது. சர்க்காரின் ஐந்தாண்டுத் திட்டத்தைக் குறைகூறிக்கொண்டிராமல் நமது சக்தியை நிர்மாண வேலையில் உபயோகிப்பதே முறை என்றார். நிர்மாண ஸ்தாபனங்கள் யாவும் ஒன்றுசேர்ந்து 1957-ம் ஆண்டிற்குள் 5 கோடி ஏக்கர் சேர்த்துவிட வேண்டும். காந்திஜியின் சர்வோதய தினத்திற்கு ஒவ்வொருவரும் ஒரு சிட்டம் நூல் காணிக்கை கொடுக்கவேண்டுமென கேட்டுக்கொண்டார். புத்தர் ஞானசித்தி அடைந்த புண்ணிய ஸ்தலமாகிய புத்த கயாவில் ஆறுவது சம்மேளனம் 1954-ம் ஆண்டு ஏப்ரல் 17, 18, 19-ம் நாட்களில் நடைபெற்றது. ராஷ்டிரபதி ராஜேந்திர பிரசாத், உபராஷ்ட்ரபதி டாக்டர் ராதாகிருஷ்ணன், இந்தியப் பிரதமர் ஜவஹர்லால் நேரு இம்மூவரும் விஜயம் செய்திருந்தனர். திரு. ஜெயப்பிரகாஷ் நாராயணன் பூதான யக்ஞத்தின் வெற்றிக்காக ஜீவன் தான சங்கல்பம் செய்தார். அதாவது தன் வாழ்க்கையையே அதற்கு அர்ப்பணம் செய்தார். அதாவது பூதான யக்ஞத்தின் மூலம் கிராமக் கைத்தொழிலை அடிப்படையாகக்கொண்ட சர்வோதய சமுதாயத்தை நிர்மாணிப்பதற்கு தன் வாழ்க்கையை அர்ப்பணித்தார். ஜெயப்பிரகாஷ் நாராயணனின் சங்கல்பம் வினோபாஜியின் மனதையே உருக்கிவிட்டது. அவரைத் தொடர்ந்து வினோபாஜியும் ஜீவன் தான சங்கல்பம் செய்தார். ஸ்ரீ சங்கரர் பிரச்சாரம் செய்து ஸ்தாபித்த அத்வைத சித்தாந்தமும், புத்தர்பிரான் உபதேசித்த அஹிம்சையும் கங்கையும் யமுனையும் போலக்கலந்து சமன்வய ஆஸ்ரமம் ஆங்கே வினோபாஜி ஸ்தாபித்தார். மேற்படி ஆஸ்ரமம் உலகிற்கு ஓர் புதிய வழியைக் காட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தேசம், ஜாதி, மதம் கட்சி, வர்க்க நிறபேதமற்றதும், அரசாங்கமற்ற சர்வோதய சமுதாயத்தை ஸ்தாபிக்கவும், நிலப்பங்கீடு தீவிரமாகச் செய்யவும் சம்மேளனம் தீர்மானித்தது.

பீஹாரில் மொத்தம் 27 மாதங்கள் யாத்திரை செய்தார். 23 லட்சம் ஏக்கரா நிலதானம் பெற்ருர். பீகாரை விட்டு 1955-ம் ஆண்டு ஜனவரி முதல் நாள் வடதிசைக்கு வணக்கம் செலுத்தி, தென்திக்கில் திரும்பி வங்கத்தில் பிரவேசித்தார். பீஹார் மந்திரிகளும், ஜெயப்பிரகாஷ் நாராயணனும், மற்றும் பல காங்கிரஸ் தலைவர்களும் தங்கள் மாகாண கோட்டாவை வெகு விரைவில் பூர்த்தி செய்வோமென்று வாக்களித்து, விடை பெற்றுக்கொண்ட காட்சி உருக்கமாய் இருந்தது. மேற்கு வங்கத்தைக் கடந்து ஒரிசா மாகாணத்தில் பிரவேசித்தார். ஒரிசா முதன் மந்திரியாலும், பொது மக்களாலும் மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது. ஒரிசாவில் விேனுபாஜி பிரவேசிப்பதற்கு முன்னுலேயே பூமிதான யக்ஞம் வெகு தீவிரமாய் நடைபெற்றுக்கொண்டிருந்தது. அதன் பயனுக பல கிராமங்கள் முழுவதுமே தானமாகக் கிடைத்தது. அந்தக் கிராமங்கள் அனைத்தும் சர்வோதய கிராமமாக மாறிவிட்டன. அதாவது அக்கிராமங்களில் உள்ள நிலமுள்ளோர் யாவரும் நிலத்தின் மீதுள்ள தத்தம் தனிவுரிமையை கிராமப் பொதுவிற்கு கொடுத்துவிட்டார்கள். இதுவரையில் பீஹாரிலும், ஒரிசாவிலும், உத்தரப்பிரதேசத்திலும் மொத்தம் 320 கிராமங்கள் சர்வோதய கிராமங்களாகிவிட்டன. மேற்படி கிராமங்களைப் பின்பற்றி நம் தேசத்திலுள்ள ஒவ்வொரு கிராமமும் ஒரு குடும்பமாக மாறும் என்பதில் சந்தேகமில்லை.

## 11. பூரி சம்மேளனம்.

1955-ம் ஆண்டு மார்ச் 27, 28, 29-ம் தேதிகளில் புண்ணிய க்ஷேத்திரமாகிய ஜகந்நாத்புரியில் ஏழாவது சம்மேளனம் வெகு சிறப்பாக நடைபெற்றது. சம்மேளனத்திற்கு இரண்டு நாட்களுக்கு முன்னர் விேனுபாஜி ஜகந்நாதரைத் தெரிசிப்பதற்காக சிஷ்யர்களுடன் ஆலயத்திற்குச் சென்ருர். அவருடன் சென்றவர்களில் ஒருவர் பிரஞ்சு மாது. அம்மாது கிறிஸ்தவரானதால் அவரை மட்டும் கோவிலுக்குள் செல்லக்கூடாதென்று அர்ச்சகர்களால் தெரிவிக்கப்பட்டது. பக்தியுடன் வருபவர் எம்மதத்தைச் சேர்ந்தவராக இருப்பினும் அவரை அனுமதிக்க மறுக்கக்கூடாதென்று விேனுபாஜி சொல்லிப் பார்த்தார். கோவில் அதிகாரி இணங்காததால் விேனுபாஜி வெளியிலிருந்து சுவாமி

தரிசனம் செய்து திரும்பிவிட்டார். அவருடைய இச்செய்கை எல்லா மதமும் ஒன்று என்ற உண்மையை உலகத்தாருக்கு உபதேசித்ததாகும்.

மேல்நாடுகளிலிருந்து நூற்றுக்கு அதிகமான ஆண், பெண் பக்தர்கள் பூரி மகாநாட்டிற்கு வந்திருந்தார்கள். ஜனதிபதி ராஜன்பாபு முதல் சுமார் 6000 பிரதிநிதிகள் மகாநாட்டில் கலந்துகொண்டார்கள். விநோபாஜி முதல் நாள் ஆரம்பப் பிரசங்கம் சோர்வுற்றிருந்த பிரதிநிதிகளுக்கு புது உற்சாகத்தைக் கொடுத்தது. ஆனல் அவருடைய இறுதிநாள் பிரசங்கம் தேசத்தை மாத்திரம் அல்லாமல் உலகத்தையே தட்டி எழுப்புவதாக இருந்தது. பூமிதான யக்ஞம் உலக சமாதான இயக்கமே என்றார். 5 கோடி ஏக்கர் தானம் சேர்ப்பதும், பகிர்ந்து கொடுப்பதும் அதற்கு ஒரு சிறிய ஆரம்பமே என்றார். ராஜாஜியின் அணுகுண்டு எதிர்ப்பும், ஜவஹர்லால்ஜியின் உலக சமாதான முயற்சியும் பூமிதான யக்ஞம் கடவுளால் நமக்கு வழி காட்டப்பட்டது என்பது ஆகியவற்றிலிருந்து பாரதநாடு உலக சமாதானத்திற்கு வழிகாட்டப் போகிறது என்பதற்கு சிறந்த அறிகுறி என்று எடுத்துக் காட்டினர். 1957க்குள் உலகம் சர்வோதய சமுதாயம் ஸ்தாபிதமாகுவதை உலகம் காணும் என்ற தன்னுடைய நம்பிக்கையை வெளியிட்டார். ஏன் ? உலக சமாதான சாவி தன் கைக்கு வந்ததாக முழங்கினர். சம்மேளனத்தில் நிலச்சுவான்தார்கள் விவசாயிகளை நிலத்திலிருந்து வெளியேற்றினல் யாரும் வெளியேறவேண்டாம் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. உயிரை விட்டாலும் நிலத்தை விடவேண்டாம் என்று விவசாயிகளுக்கு தைரிய மூட்டினர். அதுமுதல் தேசமெங்கும் பூதான இயக்கம் சூடு பிடித்து விட்டது.

விநோபாஜியின் யாத்திரை மார்க்கத்தில், வேண்டுமென்றே நிலப் பிரச்னைபற்றி அவருடைய யோசனைகளை கேட்பதற்காக பர்ஹாம்பூரில் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி கூட்டப்பெற்றது. பூமிதான யக்ஞத்தில் தீவிரமாய் ஈடுபடுவதன் மூலம் காங்கிரஸ் தன் ஆவடித்தீர்மானமாகிய சோஷலிஸ லக்ஷியத்தை நிறைவேற்றுமாறு விநோபாஜி கேட்டுக்கொண்டார்.

# 12. கலியுகம் கடந்தது புதுயுகம் பிறந்தது.

ஆதியில் பலிச்சக்கரவர்த்தி என்பவர் மகா கர்வங்கொண்டிருந் தார். அவருடைய கர்வத்தை அடக்குவதற்காக பகவான் மகா விஷ்ணு, வாமனவதாரமெடுத்து அவரிடம் மூன்றடி மண் யாசித்தார். பலிச்சக்கரவர்த்தி மூன்றடி மண் அளந்துகொள்ளச் சொன்னார். பகவான் ஓரடியால் பூமியை அளந்தார். மற்றோர் அடியால் விண்ணை அளந்தார். மூன்றாவது அடிக்கு இடம் எங்கே என்று அவர் கேட்கவும் பலிச்சக்கரவர்த்தி, கடவுளே தன்னை சோதிக்க வந்ததாக உணர்ந்து அவருக்குத் தலை வணங்கி அடிமையானார். அதுபோல் விநோபாஜீ தனவந்தர்களிடம் பூமி தானம் கேட்கிறார். முடிவில் அவர்கள் தமமு டைய சகல சம்பத்துக்களையும் சமுதாயத்துக்கு அர்ப்பணம் செய்ய வேண்டிய நிலைமை வந்தே தீரும.

அதற்கு அறிகுறியாகச் சிலர் தம் சொத்து முழுவதையும் கொடுத் திருக்கிறார்கள். சிலர் தங்கள் சொத்துக்கள் பூராவையும் கணக் கிட்டு அதல் 5ல் 1 பங்கு, 6ல் 1 பங்கு என்று பிள்ளைகளுக்கு பிாித்துககொடுப்பதுபோல் விநோபாஜியையும் தங்கள் பிள்ளைகளில் ஒருவ ராகப் பாவித்து நிலதானம செய்கிறார்கள். சிறிது நிலம் வைத்திருப் பவர்களும், நிலமனைத்தும கடவுளுக்குச் சொந்தம் என்பதை ஒப்புக கொண்டதற்கறிகுறியாக நிலதானம செயவது குறிப்பிடத்தக்கது. சிலர் மாதாமாதம் தங்கள் 'சமபளத்தில் ஆறிலொருபங்கு தானம செய்யமுன் வந்திருக்கின்றனர். இளைஞர்கள் உழைபபுதானம் செய்கி றார்கள். வியாபாரிகள், பணக்காரர்கள் விவசாயததுக்கு வேண்டிய மாடுகள, கிணறுகள தானம செய்கிறார்கள். இவ்விதமாக மக்களின் கருததிலும், செயலிலும் புரட்சி தோன்றிவிட்டது. ராமர் எய்த அம்பு காரியத்தை சாதிக்காது திரும்புவதிலலை. அதுபோல் விநோபாஜியின் யக்ஞமும் வெற்றியடைந்தே தீரும.

அன்று அரசர்கள் தம் வலிமையை மக்கள் எல்லோரும் அறியும் படி ராஜசூய யாகம் செய்தனர். இன்று விநோபாஜி, மக்களின சக்தியை யாவரும் உணரும்படி செய்ய பிரஜாசூய யாகம் நடத்துகிறார்.

பிரஜைகளின் சக்தி அளவிடமுடியாதது. அவர்கள் கற்பக தருவுக்குச் சமமானவர்கள். அவர்களின் விருப்பப்படி ராஜ்யம் நடைபெருமல் முடியாது.

நாற்பது ஆண்டுகளுக்கு முன்பே நமது அருட்பெரும் புலவர் ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியார், "முப்பதுகோடி ஜனங்களின் சங்க முழுமைக்கும் பொது உடைமை; ஒப்பில்லாத சமுதாயம், உலகத்துக் கொரு புதுமை. வாழ்க பாரத சமுதாயம் வாழ்கவே" என்று முழங்கினர். வருங்கால சமுதாயத்தைத் தம் ஆவேசப் பாடல்களால் சித்தரித்தார். அவருடைய கனவு, வினேபாஜியின் பூமிதான யக்ஞத்தால் நனவாகிறதை இப்போது பார்க்கிரேம்.

"மூன்பு பிரமதேவன் வேள்வியுடன் உயிர்க்குலத்தை ஒருமிக்கப் படைத்துச் சொல்லினன். இதனல் பல்குவீர்கள்; நீங்கள் விரும்பும் விருப்பங்களையெல்லாம் உங்களுக்கிது கறந்து தரும்." வேள்வி தொடங்கிவிட்டது. அதன் தீ நாளுக்கு நாள் எரிகிறது. வேற்றுமை, வறுமை, பஞ்சம், பிணி, பகைமை என்னும் பேய்கள் நம்மைவிட்டு ஒடத்தலைப்பட்டுவிட்டன. "எங்கள் வேள்விக் கூடமீதில் ஏறுதே தீ! தீ! இந்நேரம்! பங்கமுற்றே பேய்களோடப் பாயுதே தீ! இந்நேரம்" என்ற பாரதியின் வேள்விப் பாடலை எடுத்துப் படியுங்கள். அப்பாட்டுக்கும் வினேபாஜியின் வேள்விக்கும் உள்ள பொருத்தத்தை உணருவீர்கள். பூமிதான யக்ஞம் வளர வளர "அன்னத்தால் உயிர்கள் சமைகின்றன. மழையால் உணவு தோன்றுகிறது. மழை வேள்வியால் பெய்கிறது" என்று ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா பகவத் கீதையில் கூறிய உண்மையை, கடந்த இரு ஆண்டுகளாக பெய்யும் மழையின் மூலம் காண்கிரேம். மேலும் நன்கு காண்போம். கலியுகம் கடந்தது, அருள்யுகம் பிறந்தது. வாழ்க வினேபாஜி!

---

...ARA PUBLIC LIBRARY
...1957

# அகில இந்தியாவில் பூமிதானமும், வினியோகமும்.

(1955 *பிப்ரவரிமீ* 10உ *வரை*)

| மாகாணம் | | கிடைத்த பூமிதானம் ஏக்கர் | வினியோகித்த நிலம் ஏக்கர் | நிலம் அடைந்த குடும்பங்கள் |
|---|---|---|---|---|
| 1. பீஹார் | .... | 22,36,265 | 5,684 | 2,590 |
| 2. உத்தர் பிரதேசம் | .... | 5,16,819 | 67,040 | 23,113 |
| 3. ராஜஸ்தான் | .... | 3,32,324 | 6,953 | 1,409 |
| 4. ஒரிஸ்ஸா | .... | 1,28,814 | 708 | 214 |
| 5. ஹைதாாபாத் | .... | 1,05,130 | 25,129 | 5,614 |
| 6. மத்திய பிரதேசம் | ... | 89,058 | 10,768 | 1,958 |
| 7. மத்திய பாரத் | .... | 62,465 | 91 | 13 |
| 8. செளராஷ்டிரம் | ... | 41,000 | ... | ... |
| 9. குஜராத் | ... | 37,120 | 2,128 | 657 |
| 10. தமிழ் நாடு | ... | 29,334 | 316 | 115 |
| 11. ஆந்திரம் | ... | 21,411 | 16 | 38 |
| 12. கேரளம் | ... | 28,032 | ... | ... |
| 13. மஹாராஷ்டிரம் | .... | 25,095 | 423 | ... |
| 14. பஞ்சாப் | ... | 10,668 | 73 | 16 |
| 15. டில்லி | ... | 9,245 | 90 | 25 |
| 16. வங்காளம் | ... | 9,028 | 675 | 491 |
| 17. விந்தியபிரதேசம் | ... | 5,908 | 580 | 216 |
| 18. மைசூர் | .... | 5,435 | .... | ... |
| 19. ஹிமாசல பிரதேசம் | ... | 2,025 | .... | ... |
| 20. கர்நாடகம் | ... | 2,308 | 239 | .... |
| 21. அஸ்ஸாம் | ... | 1,692 | ... | ... |
| 22. பம்பாய் | ... | 123 | .... | ... |
| | | 36,99,300 | 1,20,913 | 36,469 |

| | | | |
|---|---|---|---|
| மொத்தம் தானபத்திரம் | ... | எண் | 4,13,883 |
| ஆயுள்கால ஊழியர்கள் | ... | ,, | 1,674 |
| சம்பத்து தான பத்திரங்கள் | .... | ,, | 1,549 |
| தானமாகக் கிடைத்த முழு கிராமங்கள் | .... | ,, | 113 |

# தமிழ் நாட்டில் பூமிதானம்
## (1955 ஏப்ரல் வரை)

| | | ஏ. செ. |
|---|---|---|
| 1. | மதுரை | 10367·62½ |
| 2. | திருநெல்வேலி | 7023·97 |
| 3. | ராமநாதபுரம் | 5674·90¼ |
| 4. | கோயம்புத்தூர் | 5126·13½ |
| 5. | திருச்சி | 3183·62 |
| 6. | தஞ்சாவூர் | 1426·29½ |
| 7. | செங்கற்பட்டு | 1285·11 |
| 8. | வட ஆற்காடு | 280·88 |
| 9. | சேலம் | 195·02 |
| 10. | தென் ஆற்காடு | 138·98 |
| 11. | நீலகிரி | 2·00 |
| | மொத்தம். | 34703·63¾ |

தானம் கொடுத்தவர்கள் 6575

*"நிலமும் நீரும் காற்றும் கதிரவனும் இறைவனுடைய படைப்புக்கள். இந்நான்கின் மீதும் எவருக்கும் உரிமை கிடையாது; யாரும் உடைமையாளராகவும் இருக்க முடியாது. நான் நிலமில்லாத ஏழை உழவர்களின் சார்பாக நியாயமான பங்கையே கேட்கிறேன்."*

—வினோபா

ஸ்ரீ ராமகிருஷ்ண பிரஸ், மதுரை:—3000—7—55.

P. 3
6-6